# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 262 | சனி, நவம்பர் 25, 2023 | 19 பக்கங்கள்


# மாவீரர் வாரச் சிறப்பிதழ்

## நவம்பர் 27 மாவீரர் நாள் 2023



## அமெரிக்க சிறப்பு படையினர் கப்பலை மீட்பார்களா?




வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## மாவீரர்களுக்குரிய மதிப்பை உலகு கொடுக்கவும்

## ஈழத்தமிழர் வெளியக தன்னாட்சியுரிமையை ஏற்கவும் உழைப்போம்

மூத்த அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்



© 2023 இலக்கு இணையம்

## தமிழர் தாயகத்தில் மாவீரர் நினைவு வாரம் ஆரம்பம்



தமிழர் தாயகத்தில் தமிழீழ விடுதலை போராட்டத்தில் தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர் நினைவு வாரம் கடந்த செவ்வாய்க்கிழமை(21) ஆம் நாள் ஆரம்பமாகியுள்ளதுடன், அதனை மக்கள் உணர்வுடன் அனுஸ்ட்டித்து வருகின்றனர்.

யாழ்.தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் முதல் நாள் நினைவேந்தல் நடாத்தப்பட்டது. அதில் பல மக்கள் கலந்து கொண்டு இலங்கை அரசினால் அழிக்கப்பட்ட மாவீரர் நினைவிடங்களில் விளக்கேற்றி அஞ்சலி

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## சம்பூர் கிழக்கு ஆலங்குள பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு மூதூர் நீதிமன்றம் தடை

திருகோணமலை சம்பூர் கிழக்கு ஆலங்குள பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்கு மூதூர் நீதிமன்றம் 23.11.2023 அன்று தேதி குறிப்பிட்டு தடை உத்தவினை வழங்கியுள்ளது. அந்த தடை உத்தரவில் தரப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106 பிரிவு இந்த வழக்கின் முறைப்பாட்டாளரான சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விடுத்த கோரிக்கையை பரிசீலித்து. (1) இன் விதிகளின்படி செய்யப்பட்ட உத்தரவு. கீழ்க் கண்ட நபர்களுக்கு இவ்வாறு உத்தரவிடப் பட்டுள்ளது.



தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் ஓட்டப்பந்தயத்தில் வெற்றி




பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற ஆசிய நாட்டுக்கான விளையாட்டுப்போட்டியில் கலந்து கொண்ட முல்லைத்தீவைச் சேர்ந்த ஈழத்தமிழ் பெண் இரண்டு தங்கப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

1500 மற்றும் 5000 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் அவர் பெற்றுள்ளார். 71 வயதான அகிலா திருநாயகி சிறிசெயனன்தபவன் என்பவரே இந்த

தொடர்ச்சி 17 ஆம் பக்கம்

## ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான இளையோரின் குரல்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான இளையோரின் குரல் என்ற தொனிப்பொருளின் கீழ் மூதூர் சந்தனவெட்டைக் கிராமத்தில் முன்னெடுக்கபட்ட நடமாடும் சேவை 21.11.2023ம் திகதி சந்தனவெட்டை கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டடத்தில் இடம்பெற்றது.



மூதூர் கிராமத்தில் பழங்குடிகள் அதிகம் வாழும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## கைதிகள் பரிமாற்றத்திற்கு இணங்கிய இஸ்ரேல்



இஸ்ரேல்- பாலஸ்தீனப் போரில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதுடன், கைதிகளைபரிமாற்றம் செய்வதற்கும் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் அரசுகள் உடன்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கட்டார் அரசின் அனுசரணையுடன், அமெரிக்கா மற்றும் எகிப்த்து ஆகிய நாடுகள் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன.

படைத்துறை மற்றும் பொருளாதார ரீதியில் இஸ்ரேல் சந்தித்துவரும் இழப்புக்கள் மற்றும் பிணைக்கைதிகளை விடுதலை செய்யக்கோரி அவர்களின் உறவினர்கள் இஸ்ரேல் அரசின் மீது மேற்கொண்டுவரும் அழுத்தங்களே இஸ்ரேலின் இந்த முடிவுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஹாமாஸ் தன்னிடம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## இஸ்ரேல் நடத்தும் போரில் தினமும் 250 மில்லியன் டொலர்கள் செலவு

போருக்கான செலவுகள் உள்ளடங்கலாக இஸ்ரேலின் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை 400 விகிதம் அதிகரித்துள்ளது எனவும் இஸ்ரேலின் நாணயமாக செகெல் நாணயம் 15 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளதுதாகவும் இஸ்ரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமான 5 வங்கிகளின் பங்குகளும் 20 விகித வீழ்ச்சியை



கடந்த இரண்டு மாதங்களில் சந்தித்துள்ளது. அல் அக்ஷ புளொட்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## இந்தியா ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு செல்லும் ரஸ்யாவின் எண்ணெய்



ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சுத்தீகரிக்கப்பட்ட எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா தற்போது இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் இந்தியா ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 7.9 மில்லியன் தொன் எண்ணெயை ஏற்றுமதி செய்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.5 விகிதம் அதிகமாகும். 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 3 மடங்கு அதிகமாகும்

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எண்ணை எற்றுமதி செய்யும் நாடுகளில் சவுதி அரேபியாவே முதலிடத்தில் உள்ளது. 2021 ஆம் ஆண்டு இந்தியா ரூஆவது இடத்திலும் 2022 ஆம் ஆண்டு ஆறாவது இடத்திலும் இருந்தது. இந்த வருடம் அது இரண்டாவது இடத்திற்கு

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்பி நிதி திரட்ட இலங்கை முடிவு

இஸ்ரேல் - பாலஸ்தீன போர் காரணமாக பெருமளவான வெளிநாட்டவர்கள் இஸ்ரேலில் இருந்து பாதுகாப்பு கருதி வெளியேறியுள்ள நிலையில் அந்த இடத்தை கைப்பற்றி தனது நிதி நிலமையை சமாளிக்க இலங்கை அரசு முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலுக்கு பணிக்குச் செல்ல இதுவரையில் 10,000 இற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பதித்துள்ளதாக இலங்கையின் தொழில் வாய்புத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுசா நாணயக்காரா கடந்த வியாழக்கிழமை (23) தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பின்மூலம்அமெரிக்கடொலர்களை நாட்டுக்குள் கொண்டுவரும் திட்டத்தின் அடிப்படையில் 20,000 பணியாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்ப இலங்கை திட்டமிட்டுள்ளது. முதலாவது தொகுதி பணியாளர்கள் அடுத்த மாதம் இஸ்ரேலுக்கு செல்லவுள்ளனர்.

இஸ்ரேலின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள பண்ணைகளில் பெருமளவில் தாய்லாந்து மற்றும் பாலஸ்தீன மக்கள் பணியாற்றிவந்திருந்தனர். ஆனால் கடந்த மாதம் 7 ஆம் நாள்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# மட்டக்களப்பை தொடர்ந்து திருமலையிலும் குறிவைக்கப்படும் பண்ணையாளர்கள்

## முற்றான அழிவில் தமிழர்கள்

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவருகின்ற தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றார்கள்.

இன்றைய தினம் (20) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் பதிவு செய்யப்பட்ட 45க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் அவர்கள் தங்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். கோடைகால சிறுபோக செய்கையின் போது நெற்செய்கை மேற்கொள்ளப்படாத தம்பலகாமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து தமது கால்நடைகளை பராமரித்து வருகின்றபோதும் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதிகளில் தங்கள் கால்நடைகளை வைத்து பராமரிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இதனால் பெரும்பாலான பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்பினை கைவிட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றார்கள்.



பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற நவம்பர் மாதம் தொடக்கம் தைப்பொங்கல் வரையான 75 நாட்களுக்கு தம்பலகாமத்தில் இருந்து 58 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மொரவெவ குளத்தை அண்மித்துள்ள பகுதியில் சிலர் தமது கால்நடைகளை வைத்து பராமரித்து வருகின்றனர். இவர்களில் தம்பலகாமத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லீம் பண்ணையாளர்கள் 20 பேரும், மொரவெவ பகுதியைச் சேர்ந்த ஒரு பண்ணையாளரும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் கடந்த 13ஆம் திகதி அதிகாலையளவில் மொரவெவ பகுதியைச் சேர்ந்த சிலரால் தம்பலகாமத்தைச் சேர்ந்த சில பண்ணையாளர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்கள் தங்கியிருந்த கூடாரங்களும் சேதப்படுத்தப்பட்டு அவர்கள் வைத்திருந்த உணவுப் பொருட்களினுள் மண்ணெண்ணை ஊற்றப்பட்டதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் கால்நடைகள் சுடப்பட்டும் இறைச்சிக்காக கடத்தப்பட்டும் வருவதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே கால்நடைகளுக்கான நிரந்தரமான மேய்ச்சல் தரையை வழங்குமாறும் இல்லாவிடில் பெரும்போக செய்கையின்போது கால்நடைகளின் மேய்ச்சலுக்காக தற்காலிக இடங்களையாவது வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டின் ஜனாதிபதி உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்குமாறும் கால்நடைகளின் உற்பத்திகளை அதிகரிக்குமாறு கூறிவருகின்றபோதும் கால்நடை வளர்ப்பிற்கான மேய்ச்சல் தரைகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படவில்லை. யுத்தம் முடிவுற்ற காலத்தின் பின்னர் வனஜீவி மற்றும் வனவளத்துறை திணைக்களினால் பெரும்பாலான மேய்ச்சல்தரைகள் கையகப்படுத்தப்பட்டு இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளது. பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும் அது விடுவிக்கப்படாமையினால் பெரும்பாலான

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

# மாவீரர்கள் ஈழத்தமிழர்களின் மக்களாணை நடைமுறையரசாக மாறத் தங்களையே ஈகமாக்கியவர்கள்

உலக வரலாற்றிலே ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவைத் தங்களின் வரலாற்றுத் தாயகமாகக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உலகின் மூத்த இனங்களில் தொன்மையானவர்கள்.

பிரித்தானிய கீழைத்தேயக் கம்பெனி 1796 இல் ஈழத்தமிழர்களின் இறைமையைத் தமதாக்கி ஆட்சியைத் தொடங்கிய பொழுது தமிழ் இந்துமாக்கடல் வணிக மொழியாக இருந்த வரலாற்றின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் தொன்மையை உணர்ந்து தமிழகத்தின் சென்னையில் இருந்தே இலங்கை முழுவதையும் ஒரே பொதுச் சட்டத்தின் கீழும் ஒரே நிதியின் பயன்பாட்டுடனும் தமிழகத்துடன் சேர்த்தே 1802 வரை ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இது இலங்கை முழுவதிலும் ஈழத்தமிழரின் இறைமையின் பரந்து பட்ட இருப்புக்குச் சான்றாக அமைந்தது. அத்துடன் தமிழக மக்களினதும் ஈழத்தமிழர்களினதும் தொப்புள் கொடி உறவுக்கும் சான்றாகியது. இனத்தால் ஒன்றுபட்டவர்கள் உலகமெங்கும் தமிழர்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றிது.

1802 இல் இலங்கை பிரித்தானிய முடிக்குரிய தனியான நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் 1815இல் தெலுங்குத் தமிழர்கள் முடிமன்னர்களாக இருந்த சிங்கள மக்களின் கண்டி அரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் 1832ம் ஆண்டு வரை ஈழத்தமிழர்களின் வன்னியரசின் 1832 ம் ஆண்டு வீழ்ச்சிக்குப் பின்னரே 1833இல் இலங்கையை கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் ஈழத்தமிழர்களதும் சிங்களவர்களதும் விருப்புப் பெறப்படாது, தாங்கள் தனியரசுகளாகக் கைப்பற்றிய தமிழ் சிங்கள அரசுகளின் எல்லைகளை ஒன்றாக்கித் தங்களின் சந்தை மற்றும் இராணுவ நலன்களுக்காக இலங்கை என்ற ஒற்றையாட்சி நாட்டை உருவாக்கி 1948ம் ஆண்டுவரை 115 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். ஆயினும் கோப்புறூக் கமரோன் அரசியலமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது சட்டவாக்க சபையில் தமிழருக்கும் சிங்களவருக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை ஈழத்தமிழரின் தேச இனத்தன்மையை பிரித்தானியா வெளிப்படுத்திய வரலாறாக உள்ளது.

04.02.1948 இல் 115 ஆண்டுகளாக தாங்கள் ஆண்டு உருவாக்கிய ஒற்றையாட்சி இலங்கைக்குச் சுதந்திரத்தை வழங்குகையில் தாங்கள் ஈழத்தமிழர்களின் விருப்பைக் கோராது உருவாக்கிய சிங்களப் பெரும் பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சிக்குள் சுதந்திரத்தை வழங்கினர். இதனை அக்காலத்து ஈழத்தமிழர்களின் அரசியலில் தனிப்பெரும் தலைவராக விளங்கிய அமரர் சட்டத்தரணி ஜி.ஜி. பொன்னம்பலம் சோல்பரி அரசியல் அமைப்பு குறித்துக் காலனித்துவச் செயலாளர் ஹோல் அவர்களுக்கு 03.11.1945 இல் அனுப்பிய CO. 54/987/ இல.96 மனுவின் மூலம் வெளிப்படையாக எதிர்த்தார். இதில் ஈழத்தமிழர்க்கும் அப்பொழுது இலங்கையில் தொழிலுக்காக வாழ்ந்து கொண்டிருந்த 750000 இந்தியத் தமிழரில் 80 வீதமானவர்கள் இலங்கையில் பிறந்தவர்களாகவும் நிரந்தரமாக வாழ்பவர்களாவும் உள்ளனர் என அவர்களின் இலங்கைக் குடிமை குறித்தும் குரல் எழுப்பியிருந்தார். அதே நேரத்தில் 15.01.1946ம் திகதிய முன்மொழியப்பட்டிருந்த சோல்பரி அரசியலமைப்புக் குறித்து இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் இணைச் செயலாளர் எஸ் சிவசுப்பிரமணியம் பிரித்தானியாவின் அக்காலப் பிரதமர் அட்லி அவர்களுக்கு அனுப்பிய CO.54/986/9/1/ இல.09 மனுவில் போர்க்காலத்தில் பிரித்தானிய அரசு வழங்கிய தன்னாட்சி அரசு தரப்படும் என்ற வாக்குறுதியை மனதிருத்தி சிறுதேச இனமாக உள்ள ஈழத்தமிழர்களுக்கான தன்னாட்சி அரசாங்கத்தை வலியுறுத்தி சோல்பரி அரசியலமைப்பை நிராகரித்திருந்தார்.

இதற்கு முன்னர் 01.09.1944ல் இல் திருகோணமலையில் பிரித்தானிய கடற்படையின் வைத்தியராக விளங்கிய தமிழகத்தின் தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் எஸ் பொன்னையா அக்காலத்தில் காலனித்துவச் செயலாளராக விளங்கிய ஸ்ரான்லிக்கு அனுப்பிய CO. 54/986/ 7/ இல. 35 மனுவில் "தமிழ் இலங்கைக்கும் மீதி இலங்கைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை வலியுறுத்தித் தமிழ் இலங்கையைத் தனியான அரசாக பிரித்தானியா சுதந்திரம் வழங்க வேண்டும் என அழுத்தமாகக் கோரியிருந்தார். இவைகள் எல்லாம் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பது அவர்களின் இறைமையின் அடிப்படையில் அவர்களின் தாயகத்தைத் தேசியத்தை நிர்ணயிக்கும் பிரச்சினை என்பதையும் இது காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினை என்பதால் ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினையாக உள்ள தென்பதையும் உலகுக்கு மிகத் தெளிவாக்குகின்றன.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கு ஈழத்தமிழர்களின் தாயகம் மீளவும் அவர்களுடைய ஆட்சிக்குட்பட வேண்டுமென்ற நிலை சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சி 1948இல் இருந்து 1972 வரை அரசபயங்கரவாதத்துடன் கூடியதும் படைபலம் மூலமானதுமான இனஅழிப்புக்களை ஈழத்தமிழர்கள் மேல் 1956 முதல் 1972 வரை நடாத்திய வரலாறு தோற்றுவித்தது. 22.05. 1972இல் பிரித்தானிய காலனித்துவம் ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களவர்களின் இறைமையுடன் ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சியில் செயற்பட அளித்த சோல்பரி அரசியலமைப்பின் 29(2) அரசியலமைப்புப் பாதுகாப்பு மீறப்பட்டுத் தனிச்சிங்கள பௌத்த நாடாக இலங்கைத் தீவை ஆட்சிப்படுத்தும் சிறிலங்கா சிங்கள பௌத்த சோசலிசக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டதால் ஈழத்தமிழர் அரசற்ற தேசஇனமாகத் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் மீளவும் தங்களின் பாதுகாப்புக்கான அரசை தோற்றுவிக்க வேண்டிய வரலாற்றுத் தேவை தோன்றியது. இந்த ஈழத்தமிழர்களின் நடைமுறையரசு அவர்களின் தேசியத் தலைவரான மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தலைமையில் 31 ஆண்டு காலம் உலக வரைபடத்தில் இலங்கைத் தீவில் இரண்டு அரசுக்கள் என்ற அதன் வரலாற்றுத் தன்மையுடன் செயற்படுவதற்கு தங்கள் உயிரால் உத்தரவாதம் அளித்தவர்கள் தான் ஈழத்தமிழர்களின் மாவீரர்கள்.

மாவீரர்கள் ஈழத்தமிழர் தாயகத்தின் குடிமக்கள். தங்கள் மக்களின் 1977ம் ஆண்டு தனியான அரசே தங்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கு ஒரேவழி என்ற குடியொப்ப மக்களாணையில் இந்த சனநாயக ரீதியான ஈழத்தமிழர்களின் முடிவைச் சிறிலங்கா ஏற்க மறுத்தால் எந்த வழிகளிலும் அதனை அடைவோம் என்ற ஈழத்தமிழ் மக்களின் உறுதியை நடைமுறைப்படுத்த தங்களின் உயிரைத் தலைவனின் விடுதலைப் போருக்கு பக்கபலமாக அமைத்தமை தான் இன்று உலக ஆய்வாளர்கள் விடுதலைப்புலிகள் படைபலம் கொண்டல்ல மக்கள் பலம் கொண்டே தங்களுக்கான ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர் எனப் பல ஆய்வாளர்கள் பல்கலைக்கழக மட்டத்தில் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டம் என்ற உண்மையை உலகுக்கு சான்றாதாரங்களுடன் வெளிப்படுத்த உதவுகிறது. இதில் நெதர்லாந்தின் Utrecht Unicersity Professor Dr. Georg Frerks மற்றும் Radboud University Assistant Professor Niels Terpsta மற்றும் கனடாவின் முனைவர் பட்ட ஆய்வாளர் விவிதா தம்பிநாதனின் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதை அடைவதற்கான ஆய்வுமுறையியல் மீள்குடியேற்றமடைதல் போன்ற பல முக்கிய இளம் ஆய்வாளர்களின் ஆய்வுகளின் வெற்றிக்கு மாவீரர்கள் மக்கள் தேசமாக எழுந்ததே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை உண்மையுடனும் நேர்மையுடனும் அவர்களால் வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது. இந்த உண்மையை அனைத்து ஈழத்தமிழரும் நெஞ்சிருத்தி சனநாயக வழிகளில் தேசமாக எழுவதன் மூலமாக எழ வேண்டும். இதற்கு ஈழத்தமிழர்களின் பண்பாட்டு மீட்டுணர்வு மீளவும் கலை இலக்கியங்கள் வழி மீளவும் கட்டியெழுப்பப் பட வேண்டும். பொங்கு தமிழ் மீளவும் உலகளாவிய ஈழத்தமிழர்களின் சனநாயக எழிச்சியாக எழ வேண்டும். இவையே மாவீரர்களின் ஈழத்தமிழர் தாயக இறைமையும் தேசிய வாழ்வும் தன்னாட்சி பாதுகாப்பும் நடைமுறைச்சாத்தியமாவதற்கு தாயகத் தமிழரும் அனைத்துலகத் தமிழாராக உள்ள தமிழர்களும் செய்ய வேண்டிய இன்றைய தாயகக் கடமையாக உள்ளது என்பது இலக்கின் எண்ணம்.

ஆசிரியர்



# உடைத்த ‘கல்லறைகளைக்’ கற்களாய்ச் சேர்த்துப் படைக்கின்றோம் கோயிலென ...

மேகம் திரண்டு மெதுவாய் நகர
மெல்லிய காற்றிடை மேனி குளிர
சோகம் துறந்து நெஞ்சம் குமுற
சோதியாய் உள்ளே புது ஒளி பரவ,
தூயவர் துயிலும் திசைகள் நோக்கி, துவண்டுவிடாமல்
நடக்கின்றோம் நாங்களே!

எடுத்துச் செல்வது எதுவென்று
ஏதுமறியா ஏக்கம் கனக்க
அடுத்தமுறை வரும்போதும் நீங்கள்
‘கேட்டதை’ எட்டமுடியாப் பாவியராய்
தொடுத்தமலர் கொண்ட மாலைகளும்
தோரணங்கள், சுடரும் கொண்டு
எடுத்தியம்ப முடியா வலியோடு
துடிக்கின்றோம் தூயவரே!

யாதுமாகி நின்றெமக்கு
யாகம் புரிந்த உம் வாசலில் வந்து,
யாரிடமும் கேட்டும் கிடைக்கா
‘வரமொன்றை’ யாதும்
வழியின்றி உங்களிடமே
யாசிக்கின்றோம் யாக்கை துறந்தவரே!

கிடைத்தற்கரிய தேசமொன்றை
கிடைக்கச் செய்யச் சென்றவர் உங்கள்
உடைத்த ‘கல்லறைகளை’
கற்களாய்ச் சேர்த்துப்,
படைக்கின்றோம் கோயிலென
தடைக்கற்கள் யாவும்
தகர்த்திட்ட வேங்கைகளே!

செல்லத் தெரியா திசைகள்நோக்கி
சொல்லத் தெரியா நிலைகள்நோக்கி
உள்ளப் பெருங்கோயிலில் உங்களையிருத்தி,
உண்மை ஒளியை நெஞ்சிலே ஏற்றி
உரக்க அழைக்கின்றோம் உங்களை நோக்கி,
கல்லறைத் தெய்வங்களே வாருங்களே!

வீழ்ந்த மண்ணில் விதைகள் முளைக்க
விடுதலைகீதங்கள் விண்ணிலே ஒலிக்க
காடுமேடுகள் களனிகள் எங்கணும்
காந்தள்ப்பூக்கள் காற்றில் தலையசைக்க
கையிலே சுடர்கொண்டு,
கனத்த மனதோடு
உம்மை அழைக்கின்றோம்
கண்திறவீரோ கார்த்திகைத் தெய்வங்களே!

-காந்தள்-

# மாவீரர்களுக்குரிய மதிப்பை உலகு கொடுக்கவும்

## ஈழத்தமிழர் வெளியக தன்னாட்சியுரிமையை ஏற்கவும் உழைப்போம்

மூத்த அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

“ஈழத்தமிழர்கள் வீரத்தைக் கொண்டே விரல் மடிப்பதெனில் -கார்த்திகை மாதமே எமக்குக் கண்திறந்த மாதம் - ஈழத்தமிழருக்கு இருநூறு கைமுளைத்ததும் - ஈழத்தமிழருக்கு கூரிய வேல் துளைத்ததும் இந்த மாதத்தில்தான். தமிழரை மீண்டும் தமிழரென்றாக்க முதல்நாள் பிள்ளையொன்றுவிழிதிறந்தது. தமிழரின்நெஞ்சில் இடிசொருகிவிட்டு மறுநாள் பிள்ளையொன்று விழி மூடியது. ஆண்டுகள் வேறாயினும் தேதிகள் அருகருகாயின. இது தற்செயலான சம்பவம் அல்ல.



சரித்திரமான அதிசயம்.”,எனத் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைக் கவிஞனாகத் திகழ்ந்த புதுவை இரத்தினதுரை கவிதா நயத்துடன் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 26.11.1954 இல் மண்ணில் மலர்ந்தமையையும் லெப்டினன்ட் சங்கர் (சத்தியநாதன் ) தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் வீரச்சாவடைந்த வீரனாக 27.11.1982 இல் தாய் மண்ணின் விடுதலை வித்தாகியதையும் புதுவை இரத்தினதுரை அவர்கள் கவிதாமொழியில் வரலாற்றுப்பதிவாக்கிய வரிகள் இவை. இதன் வழி ஈழத்தமிழர் வரலாற்றில் கார்த்திகை 26 அதன் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்றின் ஆற்றலாக அமைந்ததையும், லெப்டினன்ட் சங்கர் விடுதலை வரலாற்றின் உந்து சத்தியாக மாவீரப்பயணத்தை கார்த்திகை 27இல் தொடக்கி வைத்தமையையும் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதா வரிகள் இன்தமிழால் ஒவ்வொரு தமிழனுடைய இதயத்திலும் வரலாற்றுப் பதிவாக்குகின்றன. அந்த வகையில் விழி திறந்த தலைவனை நன்றியோடு கொண்டாடும் கார்த்திகை 26ம் வழி திறந்த மாவீரனை கைபிடித்து எழுந்தே மாவீரர் உறுதியின் உறைவிடங்களில் தேசவிருள் அகல மாவீர தீபம் ஏற்றி நாட்டையே ஒளித்தேசமாக்கி மரணமில்லாத அந்த மனிதகுலத்தின் வாழ்கின்ற வல்லமையைத் தமதாக்கி ஈழத் தமிழர்கள் தங்கள் தாயகத்தின் தேசிய நாளையும் அதுவாக்கி விதைகுழிப் பெருநாளாய் வித்துடல்கள் மேல் “மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ் மீது உறுதி — வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி — விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி – இழிவாக வாழோம் தமிழீழப் போரில் இனிமேலும் ஓயோம் உறுதி.” என ஈழத்தமிழர்களின் இறைமையின் காவற் தெய்வங்களின் காணிக்கைத் திருநாளில் ஊரே கூடி ஒப்பாரி வைக்காது உருக்கொண்டாடி உறுதி எடுத்துக்கொள்கையில் உலகெங்கும் புலம்பெயர் ஈழத்தமிழர்களும் இணைந்தே உலகவிழாவாக மாவீரர்நாளை கார்த்திகை 27இல் முன்னெடுப்பது இன்றையத் தமிழர் சமகால வரலாறு.



கார்த்திகை மாதத்தில் பூப்பதாலும் மஞ்சள் சிவப்பு வர்ணமாய் மலர்வதாலும் அதன் கழுத்துப்போல் இருக்கின்ற நுனியில் அது நஞ்சைக் கொண்டிருக்கிறது என மலர் ஆய் வாளர்கள் கூறுவதாலும் கார்த்திகை மலர் மாவீர்களுக்கான சின்னமாக அறிவிக்கப்பட்டது என்பது தேசியக்கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கார்த்திகைப் பூ ஈழத்தமிழர்களின் தாயகத்து தேசிய மலராக தாயகத்தின் தேசிய நாளாம் மாவீரர் நாளில் தாயகத்திலும் உலகெங்கும் வாழும்தமிழர்களாலும்அணியப்பெற்றுவருவதும் சமகால ஈழத்தமிழர் பண்பாடாக உள்ளது. தமிழரின் தொன்மையும் தொடர்ச்சியுமான சிவவழிபாட்டில் உலகையும் மக்களையும் காக்க உலகையும் மக்களையும் அழிக்க எழுந்த பாற்கடல் நஞ்சை சிவபெருமான் கழுத்திலே தாங்கினான் என்பதால் ‘நஞ்சுண்ட கண்டன் ‘ ‘நீல மிடற்றன்’ என்கின்ற சொல்லாட்சிகள் தமிழர் பண்பாட்டில் உலகையும் மக்களையும் காப்பதாகப் போற்றப்படும் கடவுளைக் குறித்து நிற்கின்றன.

இதனால் தமக்கென வாழாப் பிறர்க் குரியாளரைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் தமிழர்பண்பாட்டு வழமையாகவுள்ளது. இதனைத் தமிழரின் மெய்ப்பொருள் நூலான திருக்குறள் தவம் என 27 வது இயலில் எடுத்து விளக்கி 268வது குறளில் தன்னுயிர் தானறப் பெற்றானை
யேனைய மன்னுயி ரெல்லாந் தொழும்

என மாவீரர்களைத் தெய்வமெனப் போற்றல் தமிழ்மரபு என்பதை உறுதி செய்கிறது. அதுமட்டுமல்லாது இல்லற வாழ்வின் பயன் இவ்வாறு வாழ்தலேயென 50வது திருக்குறளில்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

எனத் தெளிவாக எடுத்துரைத்திருப்பதையும் காணலாம். அதுமட்டுமன்றி குடிமை குறித்து உலகிலேயே மிகச்சிறப்பான விளக்கத்தைத் தொகுத்து குடிமை என்னும் 96வது இயலை படைத்தளித்த வள்ளுவர் 955 வது குறளில்

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் பிரித லின்று

என குடிமைக்கு மிடிமையோ அடிமையோ தோன்றி மக்கள் தமது தன்னாட்சியை இழக்கின்ற அபாயங்கள் தோன்றுகின்ற நேரத்தில் பண்பாட்டு மறுமலரச்சியைத் தொன்மைப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதன் மூலம் முன்னெடுத்து எப்பொழுதும் தம்நிலைமைக்கு தாழ்மையை ஏற்படுத்தாத பண்பான “மானம்” போற்றுவதன் மூலம் மீளவும் விடுதலை வாழ்வு பெற வேண்டுமென விளக்குகின்றார். இதனால்தான்

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி
னந்நிலையே கெட்டான் எனப்படுத னன்று

எனகால்கழுவுகிற வாழ்வும்தன்னில்தங்கி வாழாது பிறரில் தங்கி அவர்கள் முகவர்களாக மண்ணையும் மக்களையும் அடிமைப்படுத்தும் கோமாளி வாழ்வும் வேண்டாமென்று தெளிவாகக் கூறும் வள்ளுவர் அவ்வாறு கெஞ்சியும் கொஞ்சியும் அஞ்சியும் சலுகை மனிதர்களாக வாழாது எந்தச் சிலுவையையும் சுமந்து மடிந்து உயிர்க்கும் உறுதியால் மரணமற்ற வாழ்வை வாழுமாறு 969 வாழும் வது குறளால் அழைக்கும் வள்ளுவர்

மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்

என கவரிமா என்னும் பனிப்பிரதேச மான் அதனுடைய உடலின் மயிர்களை வர்த்தக நோக்கில் போர்வைகள் செய்வதற்காக கத்தரித்தால் குளிர்தாங்காது இறந்தவிடும் அவ்வாறு ஒரு மனிதனுடைய மானம் என்னும் தன்னளவில் தான் சுதந்திரமாக வாழும் பிறப்புரிமையான தன்னாட்சி இழக்கப்பட்டால் அவன் அடிமையுற்று மானமிழந்து வாழ்வதை விட மரணத்தால் அமைதி பெறுவதை விரும்புவதான் என எடுத்துரைக்கும் வள்ளுவர் அடுத்த 970 வது குறளில்

இளிவரின் வாழாத மானமுடையார்
ஒளி தொழுதேத்து முலகு

என வாழ்கின்ற நிலைக்கு தாழ்வு வரின் அதனை எதிர்த்து போராடும் மானம் உடையார் செயற்கரிய செயலைச் செய்வதால் அவர்களை உலகம் தொழுது போற்றும் என மாவீரம் உலகால் கொண்டாடப்படுவதற்கான காரணத்தைத் தெளிவு படுத்துகின்றார்.

இதனை அடுத்த பெருமை என்கின்ற 98வது இயலில் 971 வது குறளில் வள்ளுவர்

ஒளியொருவற் குள்ள வெறுஂகை
யிளியொருவற்
கஂதிறந்து வாழ்து மெனல்

என பெருமை என்பது ஒருவர் தான் மற்றவர்கள் மனிதம் வாழச் செய்யாத அருஞ்செயலைத் தான் செய்தல் என்கின்ற உள்ள உறுதி என்கின்ற ஒளி என்பதையும் அவ்வாறு ஒருவர் பிறர்வாழாத் தான் அருஞ்செயல்களைச் செய்யாது தானே வாழ்தல் அவருக்கு இளிவான மதிப்பை உலகில் பதிவாக்கும் என்பதையும் எடுத்து விளக்குவதன் மூலம் மனிதப்பிறப்பின் மகத்துவமே தன் ஆற்றலை அறிவை செல்வத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து வாழ்தல் என்கின்ற உயரிய உண்மையை உள்ளத்தில் பதிக்கின்றார்.

இதற்கு மனித சமத்துவம் போற்றப் பட்டாலே மனித ஆற்றல் சமுதாய வல்லமையாக வெளிப்படும் என்பதால் அடுத்த 972 வது குறளில்

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்



என சாதி மத மொழி நிற பிரதேச பால் பாகுபாடுகளற்ற ஆட்சி முறைமையுள் தான் மனிதன் செயற்கரிய செயலை செய்வதற்கான தன்மை நடைமுறைச்சாத்தியமாகும் என்பதை மாவீர வெளிப்பாட்டுக்கான முன்நிபந்தனையாக முன்வைக்கின்றார்.

இதற்கு அடுத்த 973வது குறளில் தான் புரட்சிகர செயற்பாட்டுக்கான அழைப்பு

மேலிருந்து மேலல்லார் மேலல்ல கீழிருந்தும்
கீழல்லர் கீழல் லவர்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



# அன்று முள்ளிவாய்க்கால் - இன்று காஸா

‘காசா’வே!
கடவுளின் பெயராலே
களவாடப்படும் தேசமே
கண்ணீரில் கரைகிறதென்
கணங்கள் இங்கே

எனக்கு நடந்தவைக்கா
உனக்கு நடப்பவைக்கா
எதற்காக அழுகின்றேன்?
எனக்கே தெளிவில்லை

பாலஸ்தீனமே
அழகுமிகு
பாலைநில நறுமலரே
கண்திறந்தால் உன்தேசம்
கனவினிலே என்தேசம்
நான் காதலித்த ஈழநிலம்

காலம் வேறெனினும்
கதறல்கள் ஒன்றேதான்

எனக்கும் உனக்கும்
நிலமும் வளமும்
வேறாகிப் போனாலும்
வலியும் வாழ்வும் மட்டும்
ஒன்றாகிப் போயிற்று

‘வல்ல’அரசுகள்
வல்லவர்கள் நரபலியில்
அள்ள அள்ள குறையாமல்
ஆயுதங்கள் அவர் மடியில்

யாரழுது என்ன பயன்?
இது
போர்வெறியின் பொற்காலம்!

எடுப்பார் கைப்பிள்ளை
எனவிருக்கும் பல தேசம்
தடுப்பார் எவருமில்லை
சாத்தான்கள் கொண்டாட்டம்

கருவறையே கல்லறையாய்
தெருநிறைக்கும் சாவோலம்
திருமறையும் தலைகுனிய
உருக்குலைந்த
தசைக்கோலம்!

யாரழுது என்ன பயன்?
இது
போர்வெறியின் பொற்காலம்!

புல்லாக புழுவாக
பிறப்பொன்று எடுத்திருப்பின்
சற்றேனும் அசைந்திருப்பேன்
சட்டென்று எழுந்திருப்பேன்

பாவிநான் என்செய்வேன்?
கல்லாய் கிடக்கின்றேன்
மனிதப் பிறப்பெடுத்தேன்!

பழிவாங்கல் எனும்பேரில்
நிலச்சூறை நடக்கிறது
ஓர் இனமே,
கொலையாகிக் கிடக்கிறது!

செய்தித்தாள் படிக்கையிலே
‘செல்’லடியைப்
பார்க்கையிலே
உள்ளிருக்கும் காயமதில்
கல்லடித்துப் போகிறது

நந்திக்கடல் ஓரமதில்
சந்ததிகள் தொலைத்தழுதோம்
வந்தேறி சிங்களத்தால்
சொந்தநிலம் நாமிழந்தோம்

ஈரேழு ஆண்டுகள்
அதிவிரைவாய் கடந்தென்ன!
அனுபவித்த அத்தனையும்
ஆறாது அடிமனதில்
அப்படியே கிடக்கிறது!

தாளாத துயருடன்தான்
தமிழீழம் நடக்கிறது!

‘காசா’வே, கலங்குகிறோம்
தூசாகும் உன்நிலையால்

கூசாது பொய்யுரைத்து
குலமழிக்கும் வெறியரினால்
மாசுநிறை இம்மண்ணில்
மனிதருக்கு மதிப்பேது?

பிறப்பிற்கு முன்பாங்கே
இறப்பறியும் பாலகரே,
பேயுலவும் தேசமிதை
பெருமனதாய் மன்னிப்பீர்!
பேயுலவும் தேசமிதை
பெருமனதாய் மன்னிப்பீர்!

-மது நோமன்-

# களங்கமற்ற மனதுகளால் கல்லறைகளில் சபதம் செய்வோம்



அனுசுயா ஆனந்தரூபன்

எண்ணமெல்லாம் தாயகக் கனவைச் சுமந்து, நமக்காய்த் தம்முயிரை ஆகுதியாக்கி, நன்றி மறவான் என் தமிழன் என்றும், என் கனவை அவன் சுமப்பான் என்றும் நம்பிக்கையோடு தாய்மண் மடியில் தலை சாய்த்துத் துயிலும் தமிழ் மறவர்கள்.சிலருக்கு அக் கொடுப்பனவு கூட இல்லை.அவர்கள் கொண்ட கொள்கைக்காய் உலகெங்கும் பயணித்து அங்கே தம் இன்னுயிர் நீத்து இயற்கையோடு கலந்துவிட்ட இறை தந்த நம் கொடைகள்.

வாயாரப் புகழ்கின்றோம். ஆண்டொன்றில் "நாள் "ஒதுக்கி அழுதெழுந்து கடக்கின்றோம். செய்ய வேண்டியது தான். ஆனால் செய்ய வேண் டியது இது மட்டும் தானா??? என் கல்லறை தேடி வந்து கண்ணீர் சிந்திச் செல்வார் என் நண்பர், என் சுற்றம், என்னுறவு என்ற மட்டில் தீர்ந்து விடுமா மாவீரர் நற்கனவு??? இறந்த பின்பும் அவர் அமைதியற்று அழுதுறங்கும் நிலை தந்தவராகி விட்டோமோ நாம் என்றளவில் தான் நீள்கின்றது உண்மை உரணர்வுடையோரது குற்றவுணர்வு. உயிர் கொடுத்தார் உயிர் கொடுத்தார் என்று ஆயிரம் முறை சிலாகிக்கும் நாம் ஏன் கொடுத்தார் எதற்கு கொடுத்தார் இன்னும் அக்கொடைக்கான பலன் துளி பெற்றோமா என்றெல்லாம் எண்ணுகின்றோமா? அனைத்தையும் எண்ணித் தொடர வேண்டிய அடுத்த சந்ததியினரிடம் தெளிவான இலக்குகளை சரிவரக்கூறி கடத்திச் செல்கின்றோமா?

தமிழுக்கும்,தமிழ் மக்களுக்கும் அவர்களின் நியாயமான உரிமைக்கும் உத்தரவாதம் வேண்டி, அதன் உன்னதமான தேவை உணரப்பட்டுப் போராட்டங்கள் பல வடிவம் பெற்றன. அதன் நேர்த்தி பேணப் பல கோட்பாடுகள் வடிவமைக் கப்பட்டன. அத்தனையும் அப்படியப்படியே இன்று வரை தெளிவுற விளங்கப்படுகின்றனவா? ஒரே சீராய் கொள்கைகள் பேணப்படுகின்றனவா என்றெல்லாம் வினா எழுப்பினால் துயர் தரும் பதில் "இல்லை". என்பதுவே.

காலத்தோடு மாற்றம் இயல்புதான் என்போரும், காலத்துக்கும் மாற மாட்டோம் என்று நுனிப்புல் மேய்ந்தவராய் உப்புச்சப்பற்ற விடயங்களுக்காய் மல்லுக்கட்டி நிற்போரும் முரண்பட்டு, கொள் கைகள் நூறாகி குழுக்களும் பலவாகி கூறாகிப் போய் நிற்கும் நம்மினத்தின் நிலை கண்டு மாவீர ஆன்மாக்கள் துடித்தழுது விம்மாதோ?

செயல்கள் வீரியம் பெற்றதனால்தான் செய்தவர் "மேதகு தலைவர்" ஆனார். இது பற்றிய புரிதலில் தெளிவு வேண்டும்.

"செயல்'முந்தும் இடத்தில் தான் விளைவுகள் தானாய் வீரியம் பெறும். அதைச் செய்பவன் ஆளுமையை ஏற்றுக் கொள்ளும் இனம் தான் விடியலைப் பெறும்.

இன்று செய்பவன் நான்தான் என்று காட்டுவதில் தான் எத்தனை போட்டி?? எதிரி தன்னிலக்கில் மிகத் தெளிவாக இருக்க, அத்தனை நடவடிக்கையையும் ராஜதந்திரத்தோடும் தூர நோக்கோடும் முன்னகர்த்த, நாம்????????

நம்முள் சிந்தனை திறன் மிக்க மனிதர்கள் பலர் உண்டு. அதில் ஒன்றும் குறைபாடு இல்லை. ஆனால் காலத்தின் தேவை உணர்ந்து அப்படியானவர்கள் தம்முள் சின்னத்தனங்கள் மறந்து, நேர்படப் பேசி ஒருவரையொருவர் அரவணைத்து அங்கீகரிக்கும் குணம் உள்ளதா? தொடங்கும் காரியத்தை முடிவு வரை இட்டுச் செல்லும் வைராக்கியம் உள்ளதா??? செய்பவன் பற்றிய சிந்தனை மறந்து செயல்களின் வீரியம் குறித்து சிந்திக்கும் திறன் உள்ளதா????இப்படி நமக்குள் நாமே பல கேள்வி கள் கேட்டுத் தெளிவுறாத நிலையில் நமக்கான விடியல் என்பது பெருங்கனவே. இத்தனை சிந்தனை தெளிவற்றவர்களுக்காகத்தான் இயற்கை நமக்களித்த இன்னுயிரை ஈந்தோமா என்று மாவீரரும் கலங்கும் நிலை மிக இழிநிலை. தனித்தனி தீவுகளாய்த்தான் நாம் செயற்படுவோம் என்னும் இனத்துக்கு தனியொரு நாடமைக்கும் தகுதி துளியுமில்லை.

உலகப் பரப்பில் நம் இலக்குகள் மிகப் பெரியவை. அதற்கான உழைப்புகள் கொட்டிக்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# முயலாமையும் இயலாமையும்

வரன் ஜெர்மனி

தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கூறு கின்றார் எங்கள் மக்களிடன் ஒரு நல்ல பண்பு இருக்கின்றது அவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒன்றை உருவாக்குவார்கள் அதன் பின் ஒருவரை தலைவர் என்றும் அவரை சுற்றி ஒரு ஒளிவட்டம் போட்டு நீ தான் கடவுள் என்று சொல்லிவிட்டு அவரவர் தம் தம் வேலையை பார்க்க சென்று விடுவார்கள் என்று.

அதுவே இன்றும் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின் உலகளா விய ரீதியில் பரவிய எமது விடுதலைப் புலி போராளிகளாக இருந்தாலும் சரி. புலம்பெயர் தமிழர்களாக இருந்தாலும் சரி. இன்னும் ஒன்றையும் முயலாமல் நாங்கள் எவரையோ தேடுகின்றோமே தவிர எங்களில் ஒருவர் முன் னுக்கு வந்தது கிடையாது. எவற்றையும் முழுமையாகச் செய்ததும் கிடையாது. அப்படி வந்தால் அதைச் செய்ய விடவும் மாட்டார்கள் அவர்களை எதிர்க்கும் ஆளுமையும் கிடையாது.

பிட்டுக்காகாப் பரமேசன் மண்ணைச் சுமந்தான் இயேசு தத்துவத்தை காப்பாற்ற சிலுவை சுமந்த நாங்கள் எவரும் எதற்காகவும் எதையும் சுமக்க தயாராக இல்லை என்பது தான் இங்கே உண்மை

முயலாமையினால் அடங்கா ஆசைகளு டன் எழுந்த இயலாமையின் காரணமாக இன்றும் உலகளாவிய ரீதியில் எங்களுக்குள் போட்டி பொறாமையுடன் கூடிய பொய் சூது சூழ்ச்சிகள் செய்து கொண்டு ஒரு மைல் கல்லும் நகராது நிற்கின் றோம்

எங்கள் மாவீரர் தியாகத்தால் எமது இலக்கை நோக்கிய பயணத்தில் ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்து முன்னேறிய பாதை இன்று ஆயிரம் ஆயிரம் மைல் கற்கள் பின்னோக்கி நிற்கின்றோம்

ஒரு இலட்சியத்தால் ஒன்றுபட்டு அந்த இலட்சியத்துக்காக தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்கள் பாதையில் நாங்கள் செல்லாது தனிப்பட்ட பிரச்சனையாகவும் தனிப்பட்ட விரோதங்களாகவும் வளர்த்து தனித்தனியே தெறித்துச் திக்கும் திசையாக தெரியாது சிதறி நிற்கின்றோம்

நாங்கள்வணங்கும் எம்முள்ளேஇருக்கும் மாவீரர்கள் சக்தி எம்மை வழிநடத்தும். நாங் கள் உண்மையானவர்களாக இருந்தால் எம் முள் இருக்கும் நான் என்னும் அகங்காரம் அழிந்தால் நீ சிறிதாகி உனக்கு நாடு பெரிதாகும் அப்போது உன் கண்கள் திறந்து இறவா வரம் கொண்ட பிரபாகரனயம் இருள் போக்கி தடை நீக்கி வழிகாட்டும். அவன் அருள் வேண்டும் அவனை வணங்க கால வழிகாட்டி எங்கள் தலைவன்.

நாங்கள் அறிந்தவை கை மண்ணளவு அறியாதவை உலகளவு அவன் ஒரு பல்கலைக் கழகம் (Univercity) அவனைப் பற்றிப் படித்துக்கொண்டே போகலாம் நாங்கள் எத்தனை டிப்ளோமாவும் செய்யலாம் அறியாமல்அறியாதவைஅளவிட முடியாதவை அவன் ஒரு அண்டவெளி அவனை உணர்ந்து படித்துப் பண்புடன் பின் பற்ற வேண்டும்

அவன் சிந்தனை எங்களை இன்னும் ஆயிரம் ஆயிரம் வருடங்கள் வழிநடத்தும்...



# எமது மக்களே எமது முதுகெலும்பு

பழகிப்போன
நாட்களில் ஒன்றான

எரிபொருள் தடையும்
பெரும் பொருண்மியச்
சிக்கலும் நிறைந்த
போர்க்காலம்..

மக்களுக்கு, வீட்டு விளக்கு
பயன்பாட்டிற்குக் கூட
அந்தரித்த இராக்
காலங்கள்.

உழுபொறிகளின்
எண்ணெய்த் தாங்கிகள்
காய்ந்து
அவசரத்துக்காயினும்
அதனை உருட்ட முடியாத
இரும்புத்துண்டாக
முற்றத்தில் நிறுத்திவைத்து
மனம்விம்மிய காலைப்
பொழுதுகள்.

மகப்பேற்றுக்காக
நாட்குறித்த கர்ப்பிணித்
தாய்மாருக்காக ..
சிறப்பு சலுகையாக..
உள்ளூர் சங்கத்தினூடாக
5 லீற்றர் மண்எண்ணெய்
வழங்கப்பெற்று
கவனிப்புக்குள்ளான
எமது இயக்கத்தின்
அக்கறைமிகுந்த தருணம்
ஒருபுறம்.

மகப்பேற்று தாய்மாரின்
உளவுரணை காப்பாற்றிய
எம் தேசத்தந்தையின்
கருணை உள்ளத்தின்
வெளிப்பாடு இது.

இப்போது,
போராளிகளுக்கு
காவலரண் அமைக்கும்
பணிக்காக (டிரக்டர்)
உழுபொறி
தேவைப்படுகிறது.

உரிமையாளர்
வீட்டிற்குச் சென்று,
உதவிகோரப்படுகிறது,
முற்றத்தில் உரையாடல்
நடைபெறுகிறது,

தம்பிமார்
எண்ணெய் இல்லாம
கிழமைக்கணக்கில
ராங்
காய்ஞ்சி போய்கிடக்கு
என்னையா செய்யிறது.

முற்றத்தில் நடக்கும்
இந்த கதையாடல்
வீட்டிற்குள்ளும்
கேட்டிருக்குமோ?

மகப்பேற்றிற்காக
தாய்வீட்டிற்கு வந்திருந்த
மகள்,
ஒருகையால் வயிற்றினை
தாங்கிக்கொண்டு

மறு கையில் ஐந்து லீற்றர்
எண்ணெய்க் கானை
நீட்டியபடி
வெளியவந்தாள்

இந்தாங்க அண்ணன்
என்ர பிள்ளைய
நான் இருட்டுல
பெத்துப்போடுவன்.
நீங்க இந்த எண்ணெய்ய
ஊத்தி ரக்டர கொண்டு
போங்க..

போரை வெல்லவேண்டும்,
போராளிகள் மீதான
நம்பிக்கை,

எமக்கான
ஆத்ம பலமாக
சாட்சியாகிறது.

எமது மக்களே என்றைக்கும்
போராட்டத்தின்
முதுகெலும்பாகி நின்றனர்.
இனியும் இருப்பர்.

**அ. சுரேஸ்**

# தங்கள் ஆசைகளையும் கனவுகளையும் புறம் தள்ளிய மாவீரர்கள் மகத்தானவர்கள்

உலகில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் பிறந்தபின்னர் தம் வாழ்நாளில் பலகனவுகளுடன்தான் வாழுகின்றார்கள். அவர்களது கனவுகளும் ஆசைகளும் அவர்களது வாழ்வை மகிழ்ச்சியை நோக்கிச் செல்வதற்கு வழிகோலுகின்றன.

தமிழர் தாயகம் என்று சொல்லப்படுகின்ற பிரதேசங்களில் வாழுகின்ற, வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும்.

சிறிலங்காவில் அரசாள்பவர்கள் தங்களது நாற்காலிகளைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்காக தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளை மறுத்ததோடு மட்டுமல்லாது காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டதன் விளைவினை சிறிலங்கா இன்றுவரை அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

தமிழ்மக்கள் குறிப்பாக தமிழ்வாலிபர்கள் இயல்பாக வாழமுடியாத நிலையினை படைகளைக்கொண்டுஅரசுஅடக்கமுறப்பட்டமையினால் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தமது கனவு வாழ்வினை தமதுமக்களின் விடிவிற்காக ஈடுபாட்டுடன் அர்ப்பணிக்கத் தீர்மானித்தார்கள். சுடுகலன்களை ஏந்தி மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அவ்வாறான போராட்டத்தில் தமது மக்களது விடிவிற்காக தங்களது விலைமதிக்க முடியாத பொன்னான உயிர்களைத் தியாகம் செய்தவர்களே "மாவீரர்கள்". அவ்வாறான போற்றுதலுக்குரியவர்களையே, ஒப்பீடுகளுக்கு அப்பாற்பட்டவர்களையே ஆண்டுதோறும் 'நவம்பர் 27' ஆம் நாளன்று தமிழ் மக்கள் 'மாவீரர் நாளாக' நினைவு கூருகின்றார்கள்.



மாவீரர்கள் வெளிஉலகத்திலிருந்து வந்து குதித்து தங்களது உயிர்களை மாய்த்துக்கொண்டவர்கள் அல்ல. மாறாக தமிழர் பிரதேசங்களிலே தமது தாய் தந்தையருடனும் அக்கா, தம்பிகளுடன் அன்பு சொரிந்து நண்பர்களுடனும் உறவுகளுடனும் விளையாடி உறவாடி மகிழந்தவர்கள்.

தமக்கான வாழ்வினை எப்படியெல்லாம் தாம் வாழவேண்டும் என ஒருமனிதன் வடிவமைக்கிறானோ அப்படித்தான் மாவீரர்களும் எண்ணியிருப்பார்கள் என்பதில் எள்ளளவும் யாருக்கும் ஐயமிருக்க முடியாது.

'தான் வளர்ந்து படித்து பெரியவனாகி நல்ல தொழில் செய்து குடும்பத்தை உயர்நிலைக்குக் கொண்டு வரவேண்டும்'

'தனக்குப் பிடித்த பெண்ணைத் திருமணம் முடித்து பிள்ளைகள் பெற்று அந்தப் பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் பிறந்து பேரப்பிள்ளைகளுடன் தன் முதுமைக்காலத்தை மகிழ்ச்சியாக் கழிக்க வேண்டும்'

'வளர்ந்து சீரற்றிருக்கும் தம் ஊரின் கல்விநிலையினை மேம்படுத்தி நம் ஊரில் உள்ள பிள்ளைகள் அனைவருக்கும் சிறந்த கல்வியினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்'

'என்னைப் பெற்று வளர்த்த பெற்றோரை காலம் முழுக்க கவலையின்றி வைத்துச் சோறு போட வேண்டும்'

இவ்வாறு இன்னோரன்ன ஆசைகளுடனும் கனவுகளுடனும்தான் மாவீரர்களும் தங்களது வாழ்வைத் திட்டமிட்டிருப்பார்கள்.



தமது உயிரைத் துச்சமாக மதித்ததன் விளைவுதான் அவர்கள் தங்களை விடுதலைப் போராட்டத்துடன் இணைத்துக்கொண்டது. போராட்ட காலத்தில் அவர்கள் அனுபவித்த இன்னல்களும் வேதனைகளும் அவர்களுக்கு மாத்திரமே தெரிந்த உண்மைகள்.

அவர்கள் இரவு பகலாக கண்விழித்து, காடுகளிலும் மேடுகளிலும் அலைந்து திரிந்து, போகுமிடங்களில் உணவின்றி பசியிருந்து, விழுப்புண் அடைகின்ற நேரங்களில் சொல்லொணா வேதனைகளை எதிர்கொண்டனு பவித்து வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள்.

இவ்வாறான தியாகங்கள் எழுந்தமானமாக யாராலும் செய்துவிட முடியாதவை. தங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கில் ஓடிஒளிந்தவர்கள் மத்தியில்தான் அவர்கள் தங்களைப் போராட்டத்துடன் இணைத்துக்கொண்டவர்கள் என்பதனை தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் மறந்துவிடலாகாது.

மாவீரர்களை நினைத்து மாவீரர்நாள் நினைவு கூரப்படுகின்றது. மாவீரர் வாரத்தில் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. தமிழர் வாழும் எல்லாவிடங்களிலும் இவை நடைபெறுகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் மாவீரர்களைத் தமிழ் மக்கள் மனதில் தொடர்ந்தும் நிலைநிறுத்திச் செல்வதற்கு தேவையான வரலாற்று நிகழ்வுகள் ஆகும்.

மாவீரர்கள் தங்களது வாழ்வை தமிழ் மக்களது விடிவிற்காகத்தான் வழங்கினார்கள். அந்தத்தமிழ் மக்களில்தான் அவர்களது குடும்பமும் உள்ளடங்கியிருக்கின்றது. அந்தக் குடும்பங்களின் நிலை தற்காலத்தில் எப்படியிருக்கின்றது?

தனதுபிள்ளை தன்னை வாழவைப்பான் என்று எண்ணியிருந்த பலகுடும்பங்கள்; இன்று எப்படி வாழப்போகின்றோம் என்பதனையோ அடுத்தவேளை உணவிற்கு என்ன செய்யப்போகின்றோம் என்பதனையோ தெரியாது வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற கசப்பான உண்மையை ஒவ்வொரு தமிழனும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.



கதிர்.திருச்செல்வம்
தம்பலகமம்



மாவீரர்களின் குடும்பத்தாரின் இன்றைய செயலறுநிலைக்கு தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ்மகனும் பொறுப்பாளி, ஒவ்வொரு தமிழ்மகனும் பதில் சொல்ல வேண்டியது கட்டாயம். ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் அவர்களது வாழ்வினை வளமாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதனை கடந்து செல்லாமல் ஏற்றுக்கொண்டே யாக வேண்டும்.

### எனில் என்ன செய்ய வேண்டும்?

மாவீரர் நாள், மாவீரர் வாரம் மாத்திரம்தான் மாவீரர்களை நினைவில் வைத்திருக்கச் செய்யக் கூடியவையா? தமது பிள்ளைகளை இழந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் மாவீரர்நாள்தான். மாவீரர்நாள் என்ற பெயரில் செலவிடப்படுகின்ற அளவுக்கதிகமான நிதி எதற்காகச் செலவிடப்படுகின்றது என்பதனை எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் தம்முள்ளே கேட்க வேண்டிய கேள்வி. தமது அடுத்த வேளை உணவிற்கு வழிதெரியாத நிலையில் மாவீரர்களைப் பெற்றவர்கள் இருக்கும் போது இவ்வாறான செலவுகள் தேவைதானா என்ற நியாயமான கேள்வி எழுவதில் தப்பொன்றும் இல்லை. மாவீரர்களை நினைவு கூருபவர்கள் உண்மையாகவே நினைவு கூருவதாயின் செலவுகள் இன்றி உணர்வுபூர்மான நிழ்வுகள் ஊடாக நினைவு கூரவேண்டும்.



மாவீரர் நிகழ்வுகளிலே உள்நுழையும் அரசியல் செயற்பாடுகளும் தம்மை முன்னிலைப் படுத்தும் நிலைகளும் ஒவ்வொரு தமிழ் மகனையும் வெட்கித் தலைகுனிய வைத்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலை தொடர்ந்தும் நடைபெற இடமளிப்பது தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமானதல்ல. காலந்தாழ்த்தாது இதற்கான உறுதியானதொரு எதிர்காலத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

அனைத்து இடங்களிலும் ஒற்றுமையின்றித் தவிக்கும் தமிழர்களிடையே இவ்விடத்தில் ஒற்றுமையுடன் செயற்படுமாறு கோருவதும், அவ்வாறு ஒற்றுமையாகச் செயற்படுவார்கள் என

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# நாங்கள் ஒன்றுபட்டு நிற்பதன் மூலமே மாவீரர்களின் கனவுகளை அடையமுடியும்

மட்டு.நகரான்

தமிழீழம் உட்பட உலகெங்கும் உள்ள தமிழர்களால் இந்த மண்ணுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் களமாடி விதையான எங்கள் மாவீரர்களுக்கு நினைவேந்தல் செய்யும் நினைவேந்தல் வாரம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம். தமிழர்கள் தங்களது தாயகத்தில் ஏனைய இனங்கள் வாழும் நிலையில் வாழவேண்டும் என்பதற்காக தமது கனவுகளை துறந்து தமது சமூகத்திற்காக போராடி தமது உயிர்களை தியாகம் செய்த வீரமறவர்களை நினைவுகூரும் நாளாக மாவீரர் தினம் வடகிழக்கு தமிழர் தாயகத்திலும்,புலம் பெயர் நாடுகளிலும் அனுஸ்டிக்கப்படுகின்றது.



எவ்வாறு இருந்தாலும் இம்முறை தமிழர் தாயகப்பகுதிகளில் மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாகவும் உணர்வுபூர்வமாகவும் நடைபெற்றுவருகின்றன. கிழக்கில் மாவீரர்கள் ஏற்பாட்டுக்குழுவினரால் மாவீரர்கள் கௌரவிப்பு பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

நாங்கள் வருடத்திற்கு ஒரு முறை மாவீரர்களை நினைவுகூருகின்றோம்.இந்த மாவீரர்களின் தியாகங்களை நாங்கள் நினைவுகூருகின்றோமே தவிர அவர்களின் தியாகங்கள் எதற்காக செய்யப்பட்டது,அந்த தியாகத்தின் உன்னத நோக்கத்தினை தமிழ் தேசிய பரப்பில் உள்ளவர்கள் எந்தளவுக்கு முன்கொண்டுசெல்கின்றார்கள் என்பதை ஆராயவேண்டிய நிலையில் உள்ளோம்.



இன்னும் பத்து வருடங்களில் தேசிய தலைவர் பிரபாகரன் யார்? என கேட்கக்கூடிய நிலைமைதான் இங்கு காணப்படுகின்றது. எங்கள் மக்களிடத்தில் மறதி என்கின்ற பண்பு வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாக மக்கள் பழைய விடயங்களை மறக்கின்ற நிலைமை காணப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் அவை தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் கருத்தே இன்று கிழக்கிலும் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் சிங்கள் பௌத்த பேரினவாத குடியேற்றம் முஸ்லிம் அடிப்படை வாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட குடியேற்றங்கள் என பல்வேறு நெருக்குவாரங்களை இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் முன்னெடுத்துவருகின்றது. சிங்கள பேரினவாத சக்திகள் பல்வேறு உத்திகளை கையாண்டு கிழக்கில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குட்படுத்தமுனைந்துவந்தன.

இவற்றினைதடுப்பதற்காககாலம்காலமாக தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தார்கள். தமிழர்களின் மீதான சிங்கள அடக்குமுறைக்கு எதிராக தந்தை செல்வாவினால் 1976,மே,14,ல் வட்டுக்கோட்டை தீர்மானம் சுதந்திர தமிழீழம் ஒன்றே தீர்வு என பிரகடனப்படுத்தப்பட்டு 1977ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அதற்கான ஆணை வடகிழக்கில் 18, தொகுதிகளில் பெறப்பட்டது.



வட்டுக்கோட்டை தீர்மானத்தை அடையவே 36, விடுதலை இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்தன. பின்னர் 1989 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் 35, இயக்கங்களும் மௌனித்து ஒரேயொரு விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் மட்டும் 2009, மே,18 வரையும் போராடி ஒப்பற்ற தியாகங்களை செய்தது.

அதன் காரணமாகவே வடகிழக்கில் தமிழர்களின் நெஞ்சங்களில் சுமந்தவர்களாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கமும் மாவீரர்களும் உள்ளனர். அவர்களின் ஒப்பற்ற தியாகங்களையும் அவர்களின் தீர்க்கதரிசனமான நடவடிக்கைகளையும் தமிழர்கள் என்றும் மறக்க முடியாதவையாக இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுவந்த பேரினவாதிகள் திட்டமிட்ட குடியேற்றங்கள் விடுதலைப்புலிகள் இயக்கம் உருவாகி கிழக்கில் காலூன்ற முற்பட்ட நேரத்திலையே கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. விடுதலைப்புலிகள் கிழக்கில் காலூன்றியதன் காரணமாகவே கிழக்கு மாகாணத்தில் பல தமிழ் பகுதிகள் பாதுகாக்கப்பட்டன.

ஒரு புறம் சிங்கள குடியேற்றங்கள் மறுபுறம் முஸ்லிம்களின் அத்துமீறல்களினால் 80களுக்கு முன்பாக கடுமையான நெருக்குவாரங்களை தமிழர்கள் எதிர்கொண்டார்கள்.சிங்கள காடையர்களையும் முஸ்லிம் அடிப்படை வாதிகளையும் பயன்படுத்தி சிங்கள பேரினவாதிகள் தமிழர்கள் மீது தொடர்ச்சியான இனப்படுகொலைகளை மேற்கொண்டு பல கிராமங்களிலிருந்து தமிழர்கள் வெளியேறும் நிலைமைகள் ஏற்பட்டன.



அத்துடன் பல கிராமங்கள் சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களாக மாற்றம்பெற்றன. கிழக்கு மாகாணத்தில் 1983ஆம் ஆண்டு தொடக்கம் பல இயக்கங்கள் தமது ஆளுமைகளை செலுத்தினாலும் 1987ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் மீதே தமிழர்களின் நம்பிக்கையென்பது துளிர்விட ஆரம்பித்தது. அதன் பின்னரே தமிழர்களின் கிராமங்கள் பாதுகாக்கப்பட்டன.பல தமிழ் கிராமங்களில் மீண்டும் குடியேறும் நிலையேற்பட்டது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகள் என்பது தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தி லேயே பாதுகாக்கப்பட்டது. இன்று மயிலத்த மடு,மாதவனை பகுதியில் தமிழ் கால்நடை பண்ணையாளர்கள் தமது நிலத்திற்காக போராடும் நிலைமை ஏற்பட்டிருந்தாலும் இந்த பகுதியும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தினால் பாதுகாக்கப்பட்டே அவர்களிடம் வழங்கப்பட்டது.

இவ்வாறு இந்த எல்லைகளை பாதுகாக்க ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் ஆகுதியானார்கள். எமது பகுதிகளை பாதுகாக்க ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் ஆகுதியானார்கள்.அவர்களின் அந்த தியாகத்தினை நாங்கள் வெறுமனே கடந்து செல்லமுடியாது.அன்று அவர்கள் பாதுகாத்து தந்த எமது எல்லைப்பகுதியை நாங்கள் இன்று பாதுகாக்கவேண்டிய கடமை எமக்கு உள்ளது.

அதேபோன்று அந்த தியாகிகளின் நினைவேந்தல் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாகவும் அவர்களின் தியாகங்களை எதிர்கால சமூகம் அறிந்துகொள்ளும் வகையிலும் முன்கொண்டு செல்லவேண்டிய பாரிய பொறுப்பு இன்று தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைவருக்கும் உள்ளது. வடமாகாணத்தினைப்பொறுத்த வரையில் அந்த செயற்பாடுகள் என்பது இன்று எழுச்சிபெறுகின்றது.



ஆனால் கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ளவர்களின் போட்டியை வெளிப்படுத்தும் இடமாக இன்று கிழக்கு மாகாணம் மாற்றமடைந்துவருகின்றது. மாவீரர் தினங்களை நடத்துவதில் தமிழ் தேசிய சக்திகளுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் என்பது கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் ஆபத்தானதாக மாற்றமடைந்துவருகின்றது. எமக்காகவும் எமது மண்ணுக்காகவும் போராடியவர்களை நினைவுகூரும்இந்தநாளைஅனைவரும்இணைந்து அனுஸ்டிக்கும்போதே அது எழுச்சிகொள்ளும் நிலைமையினை அடையமுடியும்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் மாவீரர் நினைவேந்தல் குழு,தமிழ் தேசிய மக்கள் முன்னணி,சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு பிரிவினர்கள் தத்தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது முரண்பாடுகள் ஏற்பட்டு அது பாரியளவிலான சகிக்கமுடியாத நிகழ்வுகளை ஏற்படுத்துவதுடன் அதனை சாதகமாக பயன்படுத்தும் சிங்கள அரசுகள் கிழக்கில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்தவிடாமல் செய்வதற்கான பல்வேறு சூழ்ச்சிகளை முன்னெடுத்துவருகின்றது.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# தோட்டங்கள் கிராமமாக மாற வேண்டும்

துரைசாமி நடராஜா

இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் தேசிய வருமானத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி தேசத்தின் முதுகெலும்பாக இருந்து வருகின்றனர். எனினும் இவர்களின் நலனோம்பு நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கமோ அல்லது கம்பனியினரோ எந்தளவு கரிசனையுடன் செயற்படுகின்றார்கள் என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாக உள்ளது.




தொடர்ச்சியாகவே அம்மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இம்மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் அவர்களுக்கான நலன்புரி விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்படவேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப் பட்ட யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிய முடி கின்றது.

இது ஒரு சிறப்பம்சமாகும் என்பதோடு இதன் சாதக விளைவுகளை தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள பேதங்களை மறந்து சகலரும் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

*19* ம் நூற்றாண்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு மலைப்பாங்கான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். ஆரம்பகாலத்தில் இம்மக்கள் பல்வேறு தரப்பினராலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாக இருந்ததோடு இம்சைகளுக்கும் உள்ளாகினர். மேலும் கூலிகள், கள்ளத்தோணிகள், வடக்கத்தையார், தோட்டக்காட்டார், இந்தியக்காரர் என்றெல்லாம் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டுமுள்ளனர்.

எனினும் சமகாலத்தில் நிலைமைகள் மிகவும் வேகமாக மாறிக்கொண்டு வருகின்றன. தமிழ்த் தொழிலாளர்களின் துயரங்களும், இன்னல்களும் சுரண்டல் கொடுமைகளும் துயரங்களாகிக் கொண்டிருக்கின்றபோதிலும் கூட, தோட்டத்தொழிலாளர் மத்தியில் நாம் இதுவரை கண்டிராத அளவிற்கு விழிப்பும், எழுச்சியும், உரிமை வேட்கையும் முன்னேற்றமும் அதிகரித்து வருவது கவனிக்கத்தக்கதென்று கலாநிதி க.அருணாசலம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளமை நோக்கத்தக்கதாகும். இதுவொரு வரவேற்கத்தக்க விடயமாகும் என்பதனை மறுப்பதற்கில்லை.

பெருந்தோட்ட தொழிலாளர் இந்நாட்டில் குடியேற்றப்பட்ட ஆரம்ப காலங்களில் அவர்களுக்கான நலனோம்பு திட்டங்களில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. அவர்களின் உழைப்பை உறிஞ்சுவதை மட்டுமே குறியாகக் கொண்டிருந்த நிர்வாகத்தினர் பல்வேறு உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்தனர். உழைப்பு என்ற



ஒன்றைத்தவிர வேறெதுவும் அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படவில்லை.

இதேவேளை ' தோட்ட மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முற்றுமுழுதாக தோட்ட முறைமையிலேயே தங்கி இருக்கும் நிலை அங்கு காணப்படுகின்றது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் தோட்ட எல்லைக்குள்ளேயே தனியொரு அமைப்பின் கீழ் வழங்கப்படுவதால் இவை சுயதேவைகளை பூர்த்தி செய்யும் அலகுகளாக விளங்குகின்றன. இதன் காரணமாக அவற்றை பூரணத்துவ தன்மை கொண்ட அமைப்புக்களென்று கருதுவது பொருத்தமானதேயாகும். வாழ்க்கையின் வேறுபட்ட மூன்று கூறுகளாகிய தொழில், வாழ்க்கை முறை, பொழுதுபோக்கு என்பவற்றுக்கு இடையிலான தடைகள் இங்கு உடைத்தெறியப்படுகின்றன. இதனால் இவை முற்றிலும் பூரணத்துவம் வாய்ந்தனவாக இல்லாதபோதும் அவ்வாறு கருதுவது ஏற்கக்கூடியதே 'என்று ஹொல்லப் என்ற அறிஞர் தெரிவிக்கின்றார்.

### போஷாக்கின்மை

தோட்டத் தொழிலாளர்களின் நலன்கருதி சுகாதார வசதிகள்,பிரசவ விடுதி,வீட்டுவசதி என்பன செய்துகொடுக்கப்பட்ட நிலையில் இவ்வசதிகள் குறைந்தமட்டத்திலேயே காணப்பட்டன. இதனால் போஷாக்கின்மை மற்றும் பல நோய் நொடிகளுக்கும் தொழிலாளர்கள் உள்ளானார்கள். சிசு மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களும் போஷாக்கின்மை தொடர்பில் அதிகரித்த பாதிப்பினை எதிர்நோக்கி இருந்தனர்.

இந்நிலையிலேயே தொழிலாளர்களின் நலன்பேணும்பல சேவைகளையும் உறுதிப்படுத்துவதற்கு சட்டங்கள் பலவும் உருவாக்கப்பட்டன.தொழிற்சட்டங்களும் இதில் உள்ளடங்கும். இந்த வகையில் முதலாவது கட்டளைச் சட்டமாக *1841* ம் ஆண்டு *5* ஆம் இலக்கம் கொண்ட 'கூலி மற்றும் சேவைகள் ஒப்பந்த கட்டளைச் 'சட்டமானது விளங்குகின்றது. இக்கட்ட



ளைச் சட்டத்தின் கீழ் கண்காணிமார்கள் என்று அறிமுகப்படுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை வழங்கும் முகவர்கள் மூலமாக வெள்ளை இன தோட்ட உரிமையாளர்களுக்கு அல்லது துரைமார்களுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வரக்கூடியதாக இருந்தது. *1958* ம் ஆண்டின் *15* ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், *1980* ம் ஆண்டின் *46* ம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் என்பனவும் தொழிற்சட்டங்களில் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

*1865* ம் ஆண்டு சேவை ஒப்பந்த சட்டம் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. வைத்தியசாலைகளில் இறப்போரின் வீதம் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட சமூகத்தினரிடையே அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் சுகவீனமுற்றுள்ள காலப்பகுதியில் அவர்களுக்கு இருப்பிட வசதி,உணவு,வைத்திய வசதி போன்ற குறைந்த பட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை இச்சட்டம் வலியுறுத்தியது. *1984* ம் ஆண்டு *14* ம் இலக்கச் சட்டம் தொழிலாளர்களின் சமூக நலனிற்கு தொழில் வழங்குநரே பொறுப்பு என்பதனை வலியுறுத்தியது. தொழிலாளருக்கான மருத்துவ நலன் திட்டங்களை நிதிப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் அரசாங்கமே பொறுப்பென தோட்டக் கம்பனிகள் வாதிட்டு வந்த நிலை யில் *1880* ம் ஆண்டு *17* ம் இலக்க மருத்துவ தேவைகள் சட்டத்தின் கீழ் அரசாங்கமே இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

*1912* ம் ஆண்டு *9* ம் *10* ம் இலக்க மருத்துவ உதவிச் சட்டங்கள் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்த உதவிச்சட்டங்களாக விளங்குகின்றன. இச்சட்டம் முதன்முறையாக ஒரு வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் முறையான பராமரிப்பு, போஷாக்கு என்பவற்றிற்கு தோட்ட முகாமையாளரே பொறுப்பு என விதித்தது. மேலும் தோட்டங்களில் காணப்படும் சுகாதார வசதிகளையும் தோட்ட மக்களுக்கான சமூகநலன் வசதிகளையும் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டம் வழிவகுத்தது. அத்தோடு தோட்டங்களில் மலசல கூடங்களை அமைப்பதற்கும், வடிகாலமைப்புக்களை திருத்துவதற்குமான சட்டவிதிகளை உருவாக்குவதற்கும் இது அனுமதியளித்தது.

*1907* ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட



*8* ம் இலக்க ஆரம்ப கல்விச் சட்டம் தினமும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி புகட்டுவதை கட்டாயமாக்கியது. இதேவேளை *1920* ம் ஆண்டு கல்விச் சட்டம் தோட்டங்களில் ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்படுவதை கட்டாயமாக்கி இருந்தது. *1941* ம் ஆண்டு பிரசவ நன்மைகள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மாவீரர் நினைவுச்சுடர்:

# வருங்காலத்துக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கம்!

தமிழீழ விடுதலைக்காக இன்னுயிர் தந்து, தமிழீழத் தாயகத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, புலம்பெயர் தமிழுலகிலும் தமிழ் மக்களின் நினைவில் நிலைத்து விட்ட பல்லாயிரம் மாவீரர்களுக்குச் செவ்வணக்கம்!

அயல் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்காகப் போராடித் தமிழீழ மாவீரர்கள் அடைந்த போர்க்கள வெற்றிகளின் அடித்தளம் சமூக விடுதலைக்கான போராட்டத்தில் அவர்கள் காட்டிய தெளிந்த உறுதியே ஆகும். ஆணாதிக்கமும், சாதியாதிக்கமும் கோலோச்சுகின்ற ஒரு சமூகம் அயலாதிக்கத்தை எதிர்த்து ஒன்றுபடத் தகுதியற்றது என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். உயிராயுதம் ஏந்தித் தாய் நிலத்திலும் தாய்க் கடலிலும் தாய்க் காற்றிலும் போயடங்கி விட்ட கரும்புலிகள் எனும் அதிசய மாந்தர்கள் உட்பட நம் மாவீரர்கள் எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் விளையாத வியக்கத்தக்க வீரமும் ஈகமும் ஈழத் தமிழ் மண்ணில் விளைந்திட செந்நீர் பாய்ச்சினார்கள்.


மாவீரர் துயிலும் இல்லங்களையும் நினைவுச் சின்னங்களையும் சிதைத்து அழித்து விட்டதாக சிங்களப் பேரினவாதம் இறுமாந்திருக்கலாம். மாவீரர்கள் துயில் கொண்டுள்ள தமிழ் மண் தமிழ் மக்களுக்கே உரியது. அது அயலானுக்கு வணங்காமண்! ஆதிக்கத்துக்கு அடங்காப் பற்று!! ஒல்லாந்தரும் போர்த்துகேயரும் பிரித்தானியரும் சிங்களரும் பெருவிலை கொடுத்துக் கற்ற பாடத்தை இந்தியரும் கற்க விரும்பினர், கற்றுத் திரும்பினர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகின் முதல் விடுதலைப் போராட்டமன்று. நம் காலத்திலேயே நடந்து வெற்றிகண்ட சில போராட்டங்களைக் குறிப்பிடுவதானால், தென் ஆபிரிக்க மக்கள் இனவொதுக்கலுக்கு எதிராக நடத்திய நீண்ட போராட்டத்தையும், நமீபியாவிலும் சிம்பாப்வேயிலும் வெள்ளைக் காலனியாதிக்கத்துக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களையும் குறிப்பிடலாம். வல்லரசியங்களின் விருப்பங்களையும் சூழ்ச்சிகளையும் மீறி ஒடுக்குண்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றி காண முடியும் என்பதற்கு இவை வரலாற்றுச் சான்றுகளாக நம் முன்னுள்ளன.

இன்றளவும் அயராமல் தொடரும் பாலத்தீன மக்களின் தாயக மீட்புப் போராட்டம் உலகைக் குலுக்கும் நிகழ்வாகி நம் தோழமையைக் கோரி நிற்கிறது. தமிழர்கள் தமக்கு நேர்ந்த இனவழிப்புப் பேரவலத்துக்கு ஈடுசெய் நீதி கோரிப் போராடும் போது உலகில் தனித்து விடப்பட்டுள்ளோம் என்று சோர்வடையத் தேவையில்லை. மாந்தரை மாந்தர் அடிமை கொள்ளும் கொடுமைக்கு எதிரான விடுதலைப் போராட்டத்துக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு.

ரோமானிய ஆண்டைகளை எதிர்த்து வெள்ளை அடிமைகளைப் படைதிரட்டிப் போர்தொடுத்த ஸ்பார்ட்டகசைத் தூக்கிலிட்டுக் குதூகலித்த கோமான்கள் ஒழிந்து விட்டார்கள். ஸ்பார்ட்டகஸ் இன்றளவும் புரட்சிக்கும் விடுதலைக்கும் அடையாளச் சின்னமாக நம் உணர்வில் வாழ்கிறார்.

ஸ்பார்ட்டகஸ் மறைந்து சற்றொப்ப ஈராயிரம் ஆண்டு கழித்து பிரெஞ்சு 'மாவீரன்''



**தியாகு**
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

நெப்போலியனை எதிர்த்து ஹைத்தியின் கருப்பு அடிமைகளைத் திரட்டிப் போர் புரிந்த டூசான் லுவெர்த்தூர் (Toussaint L'Ouverture) புரட்சிக்கும் விடுதலைக்கும் மற்றுமோர் அடையாளச் சின்னமாவர்.



'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகும்' மாந்தரைப் போல் அல்லாமல், வாழ்வையும் சாவையும் மக்களுக்காகத் தன்னளிப்புச் செய்த நம் மாவீரர்கள் காலங்களும் வெளிகளும் கடந்து உலகின் ஒடுக்கப்பட்டோரது விடுதலை வேட்கையின் புனிதச் சின்னங்களாக மதிக்கப் பெறுவார்கள்.

வியத்னாம், கியூபா, அல்ஜீரியா, தென் ஆபிரிக்கா என்று உலகெங்கும் கடந்த காலத்தில் வெற்றி கண்ட விடுதலைப் போராட்டங்கள் போலவே இன்றளவும் எண்ணிறந்த இடர்ப்பாடுகளுக்கு முகங்கொடுத்துத் தொடர்ந்து களங்கண்டு நிற்கும் பாலத்தீனம், குர்திஷ், காசுமீரம் உள்ளிட்ட மூத்த விடுதலைப் போராட்டங்களின் தொடரியில் தமிழீழப் போராட்டத்தை ஒளிரும் கண்ணியாக்கிய பெருமை நம் மாவீரர்களைச் சாரும்.

ஒவ்வொரு தேசத்தின் விடுதலைப் போராட்டமும் தனக்கான அணிவகுப்பை உருவாக்கும் போது உள்நாட்டுச் சூழலை மட்டுமல்லாமல் பன்னாட்டுச் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கும். அனைத்துலகச் சூழலையும் வட்டாரச் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கும். ஏதேனும் ஓர் வல்லரசை நத்தி நிற்கும் அழுத்தங்கள் எழும். இந்த அழுத்தங்களுக்குப் பணியாமல் அடிப்படையில் சொந்த மக்களைச் சார்ந்து விடுதலைப் பயணத்தை முன்னெடுத்தால் மட்டுமே விடுதலைக் குறிக்கோளைத் தொலைத்து விடாமல் தொடர இயலும்.

சப்பானை நத்தி நிற்கும் அழுத்தம் வியத்நாம் விடுதலைப் போராட்டத்துக்கு எழுந்த போது தெளிவாக அதனை மறுதலித்தவர் ஹோ சி-மின். பாலத்தீன விடுதலைப் போராட்டத்தை அரபு அரசுகளின் புவிசார் அரசியலோடு பிணைக்கும் முயற்சிகளை எதிர்த்து உறுதி காத்தவர் யாசிர் அராபத். தமிழீழ விடுதலைப் போராட்ட நலன்களை இந்திய வல்லரசிய நலன்களுக்கு உட்படுத்த மறுத்து அதற்காக ஒரு பெரும் போரையே சந்தித்தவர் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சிங்களப் படையை எதிர்த்துக் கண்ட களங்கள் போலவே இந்திய வல்லரசிய அமளிப் படையை எதிர்த்துக் கண்ட களங்களும் மாவீரர்களின் புகழைப் பேசும். அவற்றிலிருந்து பெற்ற அரசியல் படிப்பினைகள் தமிழீழ விடுதலைக்காகத் தொடரும் போராட்டத்தின் பாதையெங்கும் ஒளியூட்டும்.

போராட்ட வடிவங்கள் மாறினாலும் இலக்கு மாறுவதில்லை என்று முள்ளிவாய்க்காலுக்கு முன்பே தமிழீழ விடுதலைப் புலிகள் தொலைநோக்குடன் சாற்றினார்கள். இன்று விடுதலைப் போராட்டம் நீதிக்கான போராட்டமாக வடிவெடுத்துள்ளது. மறப் போரில் வீரம் விளைத்த மாவீரர்களின் நினைவுகள் இன்று அறப் போரிலும் நமக்குத் துணையாகும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பன்னாட்டுலகச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் விடுதலைப் போராட்டங்கள் "சாத்தியமற்றவை" ஆகி விட்டதாக இன்றளவும் ஒருசிலர் கதைக்கக் கேட்கிறோம். அது வெறும் மாயைதான். ஒடுக்குமுறை இருக்கும் வரை அதற்கு எதிரான விடுதலைப் போராட்டமும் நடக்கத்தான் செய்யும் என்பதே வரலாற்று நெறி. உலக நிகழ்வுகள் இதற்கான புதிய சான்றுகளைக் காட்டிய வண்ணம் உள்ளன. பாலத்தீனத்துக்கு எதிராக இசுரேல் நடத்தி வரும் காசாப் போர் மிக அண்மைய சான்றாகும். பாலத்தீன விடுதலைக்காகவும் இனவழிப்புப் போரை உடனே நிறுத்துவதற்காகவும் புவிபரப்பெங்கும் முற்போக்கு ஆற்றல்கள் குரல் கொடுத்து வருகின்றன. தமிழீழ மாவீரர்களின் பெயரால் அந்தக் குரலில் நம் தமிழ்க் குரலும் இணைகிறது. இது வரை இணைந்திருப்பது போதாது என்றால், இன்னும் விரிவாகவும் முனைப்பாகவும் பாலத்தீனத்துக்கான நம் குரல் ஒலிக்க வகைசெய்ய வேண்டும் என மாவீரர்கள் பெயரால் அழைக்கிறேன்.

நம் மாவீரர்களின் மகத்தான தனிச் சிறப்புகளில் ஒன்று அவர்கள் தமிழின உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் களம் கண்டவர்களே தவிர ஒருபோதும் இனவாதிகள் அல்ல. சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக சிங்களக் குடியாட்சிய ஆற்றல்கள் முன்னெடுக்கும் போராட்டம் மண்ணுக்குள் உறங்கிடும் மாவீரர்களால் வாழ்த்தப் பெறும்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# விடுதலைப் புலிகளும் ஹமாஸும்!

உலகின் ஆகச் சிறந்த உளவுப் பிரிவுகளில் ஒன்றான இஸ்ரேலின் ‘மொசாட்’ கண்ணில் மண்ணைத்தூவி, இஸ்ரேலுக்குள் சுமார் 25 கிலோ மீற்றர் ஊடுருவி, 250 இஸ்ரேலியர்களை பாலஸ்தீனத்துக்கு ஹமாஸ் கடத்திக் கொண்டு வந்து இரண்டு மாதமாகப் போகிறது. ஹமாசின் மற்ற நடவடிக்கைகள் குறித்தோ, அது பயங்கரவாத இயக்கமோ இல்லையோ என்கிற விவாதம் குறித்தோ நாம் பேச வேண்டியதில்லை. தமிழீழம் அதன் தீர்வு என்கிற நிலையில் இருக்கும் ஒவ்வொருக்கும் விடுதலைப் போராட்ட வரலாறு அத்துப்படி என்பதால் அது அவசியமுமில்லை.



ஹமாஸ் என்பது ‘இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம்’ என்பதன் சுருக்கம். நமக்கு தமிழ்த் தேசியம் மாதிரி அவர்களுக்கு பாலஸ்தீன தேசியம் தான் ஒற்றைக் கொள்கை. ஒரே வித்தியாசம், நாம் மதங்களைக் கடந்து தமிழால் இணைகிறோம். அவர்கள் மதத்தால் இணைகிறார்கள். அது மூன்று மத த்தவரின் புனிதபூமி அடங்கிய மண் என்பதால் இதைத் தவிர்க்க இயலாது போயிருக்கலாம். இந்த அடிப்படை வித்தியாசத்தைக் காட்டிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இன்னொரு வித்தியாசம் இருக்கிறது. அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஹமாஸுக்கும், போர் நடவடிக்கைகளில் இருக்கிற வித்தியாசம். இந்தத் தருணத்தில் அதுபற்றிப் பேச வேண்டியது அவசியம்.



‘விடுதலைப் புலிகளைப் போற்றுகிற திரைப்படம்’ என்கிற முத்திரையுடன் 2000 ஆண்டில் என்னுடைய ‘காற்றுக்கென்ன வேலி’ இந்திய அரசால் தடை செய்யப்பட்டது. அந்தத் தடைக்கான காரணங்களில் ஒன்றாக அரசுத் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம் - ‘அவர்கள் *Ruthless Killers*’ என்பது. ஈவிரக்கமற்ற கொலைகாரர்கள் என்று, எம் இனத்தின் அடையாளமான விடுதலைப் புலிகளைக் குறிப்பிட்டது. வரலாற்று அறிவு அறவே இல்லாத ஓர் அரசாங்கத்தின் அரசியல் பிழை. அதனால் தான் அந்தத் தடையை உடைத்து, காற்றுக்குப் போடப்பட்ட வேலியை எங்களால் தகர்க்க முடிந்தது. இந்த ‘*Ruthless Killers*’ என்கிற சொத்தை வாதத்தை அம்பலப்படுத்திய பலரில் அஜீத்குமார போயகொடவை என்னால் மறக்க இயலவில்லை. அஜீத், இலங்கைக் கடற்படையில் இருந்த நேர்மையான கப்டன். மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேசாமல் நேர்படப் பேசியவர்.

1994ல் தான் கடற்புலிகளின் தலைமைப் பொறுப்பில் மாவீரன் சூசை அமர்த்தப்படுகிறார். அவருடைய வழிகாட்டுதலில் கடற் புலிகளின் தாக்குதல் தீவிரமாகிறது. அந்தத் தாக்குதல்களில் முதன்மையானது, அப்போது இலங்கையின் மிகப் பெரிய ரோந்துக்கப்பலான ‘சாகரவர்த்தன’ மீது நடத்தப்பட்ட தாக்குதல். அப்போது அதன் கப்டன் அஜீத்குமார போயகொட.1994 செப்டெம்பர் 20ம் தேதி நள்ளிரவில், 40 மீற்றர் நீளமும் 330 தொன்




புகழேந்தி தங்கராஜ்

எடையும் கொண்ட அந்தக் கப்பல் மீது புலிகள் தாக்குதல் நடாத்துகிறார்கள் .மன்னார் கடற்பரப்பு அருகே நடந்த அந்தக் கடுமையான தாக்குதலில், கப்பல் மூழ்கத் தொடங்குகிறது. அதிலிருந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் 42 பேரில் 18 பேர் உயிர் பிழைக்கின்றனர். அவர்களில் கப்டன் அஜீத்குமார உட்பட 18 பேர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் 2002 வரை 8ஆண்டுகள் புலிகளின் சிறைகளில் இருந்தார்கள், இது வரலாறு.



அஜீத்குமார எப்படி விடுதலையானார் என்பது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய வரலாறு. புலிகளின் பிடியிலிருந்த அவர் குறித்தோ அவரது சகாக்கள் குறித்தோ இலங்கை அரசு கவலைப்படவேயில்லை. அதற்கு நேர்மாறாக, அவர்கள் கொழும்புக்கு திரும்புவதில் விடுதலைப் புலிகள் அக்கறை காட்டினர். ‘உங்கள் நிலை குறித்து எதிர்க்கட்சித் தலைவருக்கு கடிதம் எழுதுங்கள்’ என்று அவர்களுக்கு ஆலோசனை கூறியவர் கரிகாலன். ஆளுங்கட்சிக்கோ அதிபருக்கோ எழுதச் சொல்லாமல், எதிர்க்கட்சித் தலைவருக்கு எழுதச் சொன்னது, புலிகளின் ஸ்மார்ட் பவருக்கான இன்னொரு சான்று. அஜீத்குமார எழுதிய கடிதத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்ப, அப்போதைய அதிபர் சந்திரிகா - ‘இப்படிச் சிலர் விடுதலைப் புலிகளின் சிறைகளில் இருப்பது அரசுக்கு தெரியாது’ என்று பதிலளித்துத் தன்னுடைய அலட்சியத்தையும் பொறுப்பின்மைமையும் உலகறியப்பறை சாற்றினார். அவர் என்றில்லை, சிங்கள அதிபர்கள் அனைவருமே, அதிகார மமதையில், அலரி மாளிகை சொகுசில், மற்றவர்கள் குறித்து கனவிலும் நினையாதவர்களாகவே இருந்தனர்; இருக்கின்றனர்.




2000 ஆண்டில் தன் மனைவி சாந்தினிக்கு, ‘நான்வருவேன்அல்லதுஎனதுபிணம்கொழும்புக்கு வந்து சேரும்’ என்று அஜீத்குமார தெரிவித்தது மனித நேயமுள்ள எவரையும் உலுக்கும். அஜீத்குமார எழுதிய கடிதத்தின் தொடர்ச்சியாக நடந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து, 2002 செப்டம்பர் 28ம் தேதி, அஜீத்குமார உட்பட 7 சிங்கள இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டனர். பதிலுக்கு இலங்கைச் சிறையிலிருந்த 11 விடுதலைப் புலிகளை சிங்கள அரசு விடுவித்தது.தன்னுடைய எட்டாண்டுக்கால சிறைவாசம் குறித்து அஜீத்குமார எழுதிய நூல்- ‘*A Long Watch*’ புலிகள் ‘*Ruthless Killers*’ என்கிற மோசடிப் பிரச்சாரத்தை அந்நூல் தகர்த்தது. புலிகள் தங்களை கண்ணியமாக நடத்தியதாகவும், கொடுக்கப்படும் உணவு சரியில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தபோது உடனடியாக அதை மாற்றியதாகவும், இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கோப்பையை வென்ற சமயத்தில் அதன் நேர்முக வர்ணனையை வானொலி வாயிலாகக் கேட்க உதவுமளவுக்கு நட்பு பாராட்டியதாகவும், அஜீத்குமார மனந்திறந்து பேசியிருந்தார். ‘புலிகளின் போராட்டம் தாய் மண்ணுக்கான போராட்டம்’ என்பதையும் பதிவு செய்திருக்கிறார். ‘விடுதலைப் புலிகள் என்கிற அமைப்பு ஈவிரக்கமற்ற அமைப்பு அல்ல’ என்கிற உண்மையையும், புலிகள் ஈர இதயத்தோடு எதிரிகளையும் நேசித்தவர்கள் என்பதனையும் அஜீத்குமாரவின் நேரடி வாக்குமூலம் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த இடத்தில் தான் ஹமாஸ் -

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# தற்போதைய, தற்காலிக போர்நிறுத்தமும் அமெரிக்கா, இஸ்ரேல், ஹமாஸ் தரப்பினரின் உண்மை நிலைப்பாடுகளும்

தமிழில்: ஜெயந்திரன்

'நவம்பர் 22ம் திகதி அதிகாலையில், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக ஒரு உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது' என்று கட்டார் (*Qatar*) அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. ஏற்கனவே கிடைத்த தகவல்களை உற்றுநோக்குகின்ற போது, பல வாரங்களுக்கு முன்னர் ஹமாஸ் அமைப்பினரின் முன்மொழிவில் இருந்த பல விடயங்கள், குறிப்பிட்ட உடன்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இந்த முன்மொழிவு இஸ்ரேல் அரசினால் முன்னர் நிராகரிக்கப் பட்டிருந்தது நினைவிற்கொள்ளத்தக்கது.



காஸா நகரத்தில் அமைந்திருக்கின்ற அல்-ஷீபா (*al-Shifa Hospital Compound*) மருத்துவமனை வளாகத்துக்குள், இஸ்ரேல் படைகள் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு ஒரு வாரம் கடந்த நிலையில், கட்டாரின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. மருத்துவமனைமீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் தொடர்பாக பன்னாட்டுச் சமூகம் பலத்த கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தது. ஹமாசின் கட்டளைப்பீடம் அந்த மருத்துவமனைக்குள் அமைந்திருந்ததாகவும், தாங்கள் அதனை அழிப்போம் என்றும் இஸ்ரேல் அதற்கு முதல் சூளுரைத்து வந்தது. அங்கு தாக்குதலை மேற்கொண்ட போது, மருத்துவமனையைத் தவிர வேறு எதனையும் அங்கு அவர்கள் காணவில்லை.



அல்-ஷீபா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் நுழைந்த விடயத்துக்கு, அமெரிக்கா தனது முற்றுமுழுதான ஆதரவை இஸ்ரேலுக்குக் கொடுத்தது மட்டுமன்றி, தங்கள் பாதுகாப்புக் கட்டடமான பென்ரகனுக்கு ஈடான ஒரு கட்டமைப்பு அந்த மருத்துவமனையின் கீழே அமைக்கப்பட்டிருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்திருந்தது. இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க எந்தவிதமான சான்றையும் முன்வைக்க அமெரிக்காவால் இயலவில்லை.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர்பாக அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே உத்தியோகப்பற்றற்ற ஒரு உடன்பாடு ஏற்கனவே எட்டப்பட்டிருந்ததாக ஊடகங்கள் வெளியிடப் பட்டிருந்தன. அல்-ஷீபா மருத்துவமனையை இஸ்ரேல் கைப்பற்றுவதை அமெரிக்கா ஆதரிக்கும் என்றும் அவ்வாறான ஒரு போர்க்குற்றத்திலிருந்து இஸ்ரேலை அரசியல் ரீதியாகவும் இராஜீக ரீதியாகவும் தாம் பாதுகாப்போம் என்றும் அவர்கள் வாக்களித்திருந்தார்கள். ஜப்பானில் 1945 இல் நடைபெற்ற இவோ ஜீமா கணத்தைப் (*Iwo Jima Moment*) போன்று அல்-ஷீபா மருத்துவமனை மீதான நடவடிக்கையை இஸ்ரேலின் போர் வெற்றியாக வெளியுலகத்துக்கு காண்பிப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

குறுகிய காலத்துக்குள் அல்-ஷீபா மருத்துமனைக்குள் இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த எந்தவிதமான கட்டமைப்பும் இருக்கவில்லை என்ற உண்மை வெளிவரும் என்றும் அப்போது அமெரிக்கா ஹமாசுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரும் என்றும், இஸ்ரேல் அந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது.

காஸாப் பிரதேசத்தில் அமைந்திருந்த சுகாதாரத்துறை ஒட்டுமொத்தமாக அழிக்கப் படுவதற்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்குப் பின்னர், ஹமாஸ் அமைப்புடன் ஒரு உடன்பாடு தற்போது எட்டப்பட்டிருக்கிறது.

பல விடயங்களைப் பார்க்கும் போது, இந்த உடன்பாடு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதிலே சிறப்பான விடயம் என்னவென்றால், ஹமாஸை ஒட்டுமொத்தமாக அழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டியிருந்த அமெரிக்காவும் இஸ்ரேலும், அந்தப் பாலஸ்தீன அமைப்புடன் இப்போது பேச்சுவார்த்தையை நடத்தி, அதனுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இந்த உடன்பாடு எட்டப்படுவதற்கு கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் மேற்படி உடன்பாட்டுக்கான நடுநிலையாளராகச் செயற்பட்ட போதிலும், அவற்றின் பங்கு பெயரளவிலானது. உண்மையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் எகிப்தோடும் கட்டாரோடும் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவில்லை. மாறாக காஸாவிலுள்ள, ஹமாஸ் அமைப்பின் தலைவரும் ஒக்ரோபர் 7 தாக்குதலின் சிற்பியுமான யாயா சின்வாரோடு (*Yahya Sinwar*) தான் பேச்சுவார்த்தையை அவர்கள் முன்னெடுத்திருந்தார்கள்.



காஸாப் பிரதேசத்துக்கு எதிராக இஸ்ரேல் படைகள் முன்னெடுத்து வரும் மிகவும் மூர்க்கத்தனமான தாக்குதல்களிலிருந்து தம்மைச் சுதாகரித்துக்கொள்ள ஹமாஸ் அமைப்பினர் ஒரு இடைவெளியைத் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்றும், என்ன விலைகொடுத்தும், எவ்வளவு குறுகியதாக இருந்தாலும், அவ்வாறான ஓர் இடைவெளியைப் பெற்றுக்கொள்ள ஹமாஸ் தயாராகவும் இருக்கின்றது என்ற தொனிப்பட, இஸ்ரேல் அரசு அண்மைக்காலமாக அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

ஆனால் தற்போது எட்டப்பட்டிருக்கின்ற உடன்பாடு தொடர்பாக வெளிவருகின்ற அறிக்கைகள் முற்றிலும் மாறுபட்ட ஒரு செய்தியையே சொல்கின்றன. இஸ்ரேலிய கைதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது, அந்த எண்ணிக்கையை விட மூன்றுமடங்கான பாலஸ்தீனப் பெண்களையும் சிறுவர்களையும் விடுதலை செய்வதாக உடன்பாடு தெரிவிக்கின்றது. எந்தவொரு இஸ்ரேலிய இராணுவ வீரரும் விடுவிக்கப்படமாட்டார்கள். இன்னும் முக்கியமாக எரிபொருள் உட்பட அதிகமான மனிதாய உதவிகள் காஸாவுக்கு அனுமதிக்கப்படவிருப்பதாகவும் உடன்பாடு தெரிவிக்கிறது. நான்கு நாட்கள் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்படும் போர் நிறுத்தத்தின் போது கைதிகள் பரிமாற்றம் நடைபெறும். தினமும் குறிப்பிட்ட நேரம் சண்டை நிறுத்தம் அமுல்செய்யப்படும் என முன்னர் கூறப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் பல மணித்தியாலங்கள் இஸ்ரேலிய குண்டுவீச்சு விமானங்களும் ஆளில்லா விமானங்களும் காஸா வான்வெளிக்கு மேல் பறப்பது தடைசெய்யப்பட்டிருக்கும்.




இப்போது உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்ட விடயங்களைப் பார்க்கும் போது, பல வாரங்களுக்கு முன்னர் ஹமாஸ் முன்வைத்த கோரிக்கைகளை அவை ஒத்திருக்கின்றன. இஸ்ரேலும் அமெரிக்காவும் அவற்றில் அதிகமான கோரிக்கைகளுக்கு உடன்பட்டிருப்பதாகவே தற்போது அறியமுடிகிறது. பேச்சுவார்த்தைகள் உண்மையான களநிலைமையையே பிரதிபலிக்கின்றன என்ற கூற்றை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், காஸாப்பிரதேசத்தில் இருக்கின்ற பாலஸ்தீன மக்களைப் போலன்றி, இஸ்ரேல் முன்னெடுத்துவரும் போரின் முக்கிய இலக்கான ஹமாஸ் அமைப்பினர் நம்பிக்கையற்ற விரக்தி நிலைக்குப் போனதாகத் தெரியவில்லை. தமக்கு முன்னுரிமையான விடயங்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏற்றுக்கொள்ளும் வரை அவர்கள் மிகவும் உறுதியாகவே இருக்கிறார்கள்.

ஒப்பமிடப்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து, மிகப் பெரிய அளவிலான அத்தியாவசிய மனிதாய விநியோகங்களுக்கு அமெரிக்காவையும் இஸ்ரேலையும் உடன்பட வைக்க, ஹமாஸ் அமைப்பினர் கணிசமான அளவு அழுத்தத்தைப் பிரயோகித்திருக்கிறார்கள். காஸாப் பிரதேசத்தில் வாழும் அப்பாவிப் பொதுமக்களின் மனிதாபிமானத் தேவைகளைக் கருத்திற்கொள்ளுமிடத்து, அமெரிக்க இராஜீக முயற்சிகள் கடந்த ஒரு மாதகாலமாகச் சாதிக்க முடியாத அளவுக்கு மிகவும் அதிகமான மனிதாபிமான உதவிகளை அனுப்பும் வாக்குறுதிகளை ஹமாஸ் பெற்றிருக்கிறார்கள்.

இதுவரை அமெரிக்கா மேற்கொண்ட இராஜீக முயற்சிகளைப் பார்க்கும் போது, உண்மையில் அது ஒரு சர்க்கஸ் போலவே தோன்றுகின்றது. அதாவது காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேல் தனது படுகொலைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து அதனை ஒரு கொலைக்களமாகவும் பயனற்ற பூமியாகவும் மாற்றுவதற்குத் தேவையான கால அவகாசத்தைக் கொடுக்கின்ற ஒரு பாசாங்காகவே அதனைப் பார்க்க முடிகின்றது.

காஸாவில் வாழும் பொதுமக்களுக்குத்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அமெரிக்க சிறப்பு படையினர்






# கப்பலை மீட்பார்களா?

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

அமெரிக்காவின் 32 மில்லியன் டொலர்கள் பெறுமதியான எம்.கியூ-9 என்ற அதி நவீன ஆளில்லாத தாக்குதல் விமானத்தை இந்த மாதம் தமது ஏவுகணைகள் மூலம் சுட்டு வீழ்த்திய ஹுத்தீஸ் படையினர் எனப்படும் ஏமன் படையினர் ஞாயிற்றுக்கிழமை (19) இஸ்ரேலின் கொடியுடன் சென்ற கப்பல் ஒன்றை தென் செங்கடலில் வைத்து கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

முதல் முதலாக உலங்குவானூர்தியில் வந்து கப்பலில் இறங்கிய ஏமனின் கொமோண்டோ படையினர் கப்பலை கைப்பற்றி சென்றுள்ளது உலகின் கடல் போக்குவரத்துக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

ஏற்கனவே வானில் தாக்குதல் நடத்திய ஏமன் படையினர் பலாஸ்ரிக் மற்றும் குரூஸ் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் இஸ்ரேலை தாக்கியிருந்தனர். தற்போது அது கடல் வரை விஸ்தரித்துள்ளது.

துருக்கியில் இருந்து இந்தியாவுக்கு கார் களை எற்றிக்கொண்டு சென்ற கப்பலையே ஏமன் படையினர் கைப்பற்றியுள்ளனர்.




பிரித்தானியாவில் பதிவு செய்யப்பட்ட கலக்சி லீடர் என்ற இந்த கப்பலானது இஸ்ரேலின் மிகப்பெரும் செல்வந்தரான ரமி உஹார் என அழைக்கப்படும் அப்ரஹாம் உகாருக்கு பகுதியாக சொந்தமானது. அதனை யப்பான் நிறுவனம் வாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வந்திருந்தது. Ray shipping Ltd என்ற நிறுவனத்திற்கு அவர் சொந்தக் காரர். அது மட்டுமல்லாது இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பான மொசாட்டின் முன்னாள் தலைவரின் நெருங்கிய நண்பருமாவார்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து ஏமனின் al-Masirah TV தொலைக்காட்சியில் பேசிய படைத்துறை பேச்சாளர் ஜெயா சாரே தாம் கப்பலை கைப்பற்றியுள்ளதாகவும், செங்கடல் பகுதியில் பயணிக்கும் இஸ்ரேலின் கப்பல்களில் பணியாற்றுவதை அனைத்துலக மக்கள் தவிர்க்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். இந்த நிகழ்வு இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்கள் வேறு ஒரு பரி மாணத்துக்குச் சென்றுள்ளதை காட்டுகின்றது.



காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதலுக்கு எதிராக தாம் தொடர்ந்து இஸ்ரே லின் இலக்குகளை தாக்கப்போவதாக ஏமன் அரசின் ஹதீஸ் அமைப்பு தொவித்துள்ளதாக சீனாவின் சிங்குவா ஊடகம் தெரிவித்துள்ளது. கப்பல் கடத்தப்பட்டதை இஸ்ரேலிய படைகள் உறுதிப்படுத்தியதுடன், அதனை ஈரான் மேற் கொண்டதாக தெரிவித்துள்ளன. ஆனால் ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அதனை மறுத்துள்ளார்.
தமது கட்டளைக்கு பணிய மறுத்ததால் ஓமான் வளைகுடாவில்பயணித்தபலகப்பல்களைமுன்னர் ஈரான் கைப்பற்றியிருந்தது. 2021 ஆம் ஆண்டு ஓமான் கடல் பகுதியில் கப்பலில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு ஈரான் காரணம் எனவும் கூறப்பட்டது. கப்பல் இஸ்ரேலின் செல்வந்தரும், வாகன ஏற்றுமதியாளருமானவருக்கு சொந்தமாக இருந்தாலும் அதில் பணியாற்றியவர்களில் எவரும் இஸ்ரேலியர் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் உக்ரைன், மெக்சிகோ ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள்.

கப்பல்களை கடத்தப்போவதாக கடந்த 14 ஆம் நாள் ஹுத்தீஸ் அமைப்பினர் அறிவித் திருந்தனர். ஆனால் ஹுத்தீஸ் படையினரின் ஏவு கணைத் தாக்குதல்களை தடுப்பதற்கும் அவர்களின் தாக்குதல்களில் இருந்து கப்பல்களை காப்பாற்று வதற்கும் என அமெரிக்கா கார்னி என்ற தனது நாசகாரி கப்பலை அங்கு அனுப்பியிருந்தது.

கார்னி கப்பல் ஹுத்தீஸ் படையினரின் குரூஸ் ஏவுகணைகளை சுட்டுவிழ்த்தியிருந்த போதும், அதனால் வர்த்தக கப்பல்களை காப்பாற்ற முடிய வில்லை. ஹுத்தீஸ் படையினர் ஏமனின் வடக்கு பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன், செங்கடல் பகுதியின் கொடிடா என்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமும் 2014 ஆம் ஆண்டில் இருந்து அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சோமாலியா கடல் கொள்ளைக்காரர்கள் தாக்குதல்கள் மற்றும் கடத்தல்கள் காரணமாக கப்பல்களில் பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் அதிகாரிகள் பின்னர் அந்த அச்சம் குறைந்த பின்னர் நீக்கப் பட்டிருந்தனர். செலவை குறைப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கை இது.

எனினும் பணியாளர்கள் தங்களை தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க பாதுகாப்பான அறைகள் கப்பலில் உண்டு. ஆனால் தற்போது கப்பல்களில் மீண்டும் தனியார் பாதுகாப்பு படையினரை பணிக்கு அமர்த்தவேண்டிய நிலை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. இது கப்பல் களின் காப்புறுதியை அதிகரிக்கும்,

உலகின் மிகவும் முக்கியமான கடல் பாதை இது. உலக நாடுகளின் எரிபொருள் பாவனைக்கான ஐந்தில் ஒரு எரிபொருட்கள் இந்த பாதையால் தான் செல்வதுண்டு. மத்திய கிழக்கு நாடுகளையும், ஆசியாவையும், ஐரோப்பாவையும் கடல் போக்கு வரத்தால் இணைக்கும் வழியும் இது தான்.




தொடர்ந்து கப்பல்களை கண்காணிப்பது என்பதும் செலவு மிக்கது. மேலும் ஏமன்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## தோட்டங்கள் ... தொடர்ச்சி ...

சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் சாதக விளைவுகளை ஓரளவு தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்தது. 1969 இல் தேசிய மரண விகிதம் 1000 இற்கு 8 ஆகவிருந்த நிலையில் பெருந்தோட்டத்தில் இது 12 ஆகக் காணப் பட்டது.

1982 இல் நுவரெலியா மாவட்டத்தில் பிரசவ மரண விகிதம் 1000 இற்கு 1.8 வீதமாக இருந்தது. 1985 ம் ஆண்டின் பிரசவ சலுகைகள் திருத்தச்சட்டம் பிரசவசகாயங்கள் பலவற்றையும் பெற்றுக் கொடுத்தது. இச்சட்டம் பிரசவ காலத்தில் ஊதியத்துடன் கூடிய 12 வாரகால விடுமுறைக்கு வித்திட்டதோடு, கர்ப்பமுற்ற ஆறாம் மாதத்திலிருந்து அதிக உயரமற்ற இடங்களில் வேலை கோரும் உரிமையை கர்ப்பிணிகளுக்கும், குழந்தை காப்பகங்களின் அருகே வேலை கோரும் உரிமையை பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

### ஏட்டுச் சுரைக்காய்

தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்கள் என்பவற்றை பாதுகாக்கும் நோக்கில் சட்டங்கள் பல காணப்பட்டபோதும் பல சந்தர்ப்பங்களில் இச்சட்டங்களின் செயலிழந்த போக்கினையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏட்டுச் சுரைக்காயாக இச்சட்டங்கள் முடக்கம் பெற்றுக்கொள்ள நிலையில் தொழிலாளர்கள் மழுங்கடிப்பிற்கு உள்ளாகின்றனர். கம்பனிகள் தோட்டங்களை பொறுப்பேற்றதன் பின்னர் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்களில் கம்பனிகள் கரிசனை காட்டுவதில்லை என்ற மிகப்பெரும் குற்றச்சாட்டும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் அவர்களுக்கான நலன்புரி விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார். இந்த யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இதற்கமைய இது தொடர்பான சட்ட மூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதற்கு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதேவேளை தொழில் சட்டத்துக்கு புறம்பாக மேலதிக சட்டமாகவே இச்சட்டம் அமுலுக்கு வருமென்றும் இது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்த அங்கீகாரமாகும் என்றும் இ.தொ.கா.வின் உபதலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்திருக்கின்றார். மேலும் கடந்த காலத்தில் கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாகவே நலன்புரி விடயங்கள் பாதுகாக்கப்பட்டன. எனினும் நலன்புரி விடயங்கள் முழுமையாக தொழிலாளர்களை சென்றடைய வில்லை. இந்நிலையில் தற்போது சட்டத்தின் ஊடாக தொழில் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களைப் பாதுகாக்க வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் பாரத் தெரிவித்துள்ளார். சட்டங்கள் இயற்றப்படுவது சிறப்பாகும் அதேவேளை அவற்றை உரியவாறு நடைமுறை படுத்தவும் சகலரும் அழுத்தம் கொடுப்பது அவசியமாகும்.

இந்நிலையில் 'தோட்டங்களில் உள்ள லயன் தொடர் அறைகளில் அல்லது வீடுகளில் குடியிருப்பதன் காரணமாகவே சமூக நலன் வசதிகளை ஏற்படுத்துவதில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவ்வீடுகள் குடியிருப்போருக்கே உரிமையாக்கப்பட்டு தோட்டக் குடியிருப்புகளும் கிராமக் குடியிருப்புக்களாக மாற்றம் பெறுமிடத்து, நாட்டின் ஏனைய துறைகளைப் போன்று இங்கும் சமூகநலன் வசதிகளை வழங்குவது சாத்தியமாகும். அத்துடன் இம்மக்களை இலகுவாக தேசிய நீரோட்டத்திற்குள் இணைக்கக் கூடியதாகவும் இருக்கும். தோட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த சமூகநலன் வசதிகளை ஏற்படுத்துவதற்கு இதுவே பொருத்தமான வழியுமாகும்' என்று பேராசிரியர் மு.சின்னத்தம்பி தனது கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

• • •

## சம்பூர் கிழக்கு ... தொடர்ச்சி ...

இதன்படி, சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சம்பூர் கிழக்கு ஆலங்குளத்தில் புலி உறுப்பினர்கள் புதைக்கப்பட்டிருக்கும் மயானத்திலோ அல்லது பொதுமக்கள் சட்டரீதியாக பயன்படுத்தக்கூடிய அல்லது பயன்படுத்தக் கூடிய எந்த வொரு மயானத்திலோ விடுதலைப் புலிகளின் இறந்த உறுப்பினர்களை நினைவு கூரும் நோக்கத்திற்காக மகாவீரர் நினைவேந்தல் தொடர்பில் காவல்துறை அதிகார வரம்பிற்குள், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106, பின்வரும் நபர்கள் மற்றும் பிறருக்கு பொது சுகாதாரம் மற்றும் பொது வாழ்க்கைக்கு ஆபத்தை விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். (1) விதியின் அடிப்படையில் நான் பரிந்துரைக்கிறேன்.

**01.கஜேந்திரகுமார் பொன்னம்பலம், (அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கட்சி மெண்டு மந்திரி யாழ்ப்பாண மாவட்டம்)**

**02.செல்வராசா கஜேந்திரன், (அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆவணங்கள்) (சமத லங்கா திராவிட காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் யாழ் மாவட்டம்)**

**03 கந்தையா கான்தீபன் அல்லது பன்பரசன் -வீரமாநகர் பாடாலிபுரம் (மகாவீர சங்கத் தலைவர்) 04. செல்வ வினோத் சுஜானி, அம்மன் நகர் 02, கட்டபரிச்சான் தெற்கு (மகாவிரு குழுவின் தலைவர்) 05 சாந்தலிங்கம்கோபிராஜா அல்து கோபி சேனையூர் 06(மகாவிரு குழுவின் துணைத் தலைவர்) 06. துரைநாயகம் ஜெகன், சூடக்குடா, சம்பூர் (குழுவின் துணை விதிகள் மாவட்ட சபை மந்திரி TNA மூதூர் பிரதேச சபை**

**07.கரன் என்கிற நவரத்தினராஜா ஹரிஹர குமார், அம்மன் நகர் 02, கட்டப்பரிச்சான் தெற்கு (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பிரதேச சபை உறுப்பினர் மூதூர், மகாவீரர் குழு பொருளாளர்)**

**04.இராமநாதன் ஸ்ரீ ஞானேஸ்வரன், சீ வியூ வீதி, திருகோணமலை (அகில இலங்கைத் தமிழ்) காங்கிரஸ் திருச்சி மாவட்ட தலைவர்)**

**08.காளிமுத்து விநோத்குமார்-அலஸ்தோட்டம், உப்புவேலி, (மகாவிரு குழுவின் அங்கத்தவர்)**

**09.ஹன்ரிக் ரமேஸ் நிகலஸ்-இல 63 தபால் தினைக்கள வீதி திரகோணமலை (மகாவிரு குழுவின் அங்கத்தவர்)**

**10.பி. பிரபாகரன் அலஸ்தோட்டம், உப்புவேலி, (மகாவிரு குழுவின் அங்கத்தவர்)**

**11.செல்துரை ராஜேன்திரன் -வீரமாநகர் பாடாலிபுரம் (மகாவிரு குழுவின் அங்கத்தவர்)**

**12.ராமநாத் ஸ்ரீ ஞானேஸ்வரம் -கடற்கரை வீதி திருகோணலை (அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் மாவட்ட லைவர்)**

**13.குஹான் என்கிற கந்தசாமி ஆறுமுகதாஸ், (அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் இளைஞர்) 06. கந்தையா காண்டீபன் என்கிற பாம்பரசன் விராமநகர், பாதலிபுரம் (மகாவிரு சமிதியில்) தலைவர்)**

**14.புவி எனப்படும் குமாரசூரியன் புனிதராசா, LB 03 அதிமான்கேணி தெஹிவத்தை, சேருநுவர (மகாவீரர் குழுவின் ஆவணங்கள்)**

**15.ரமேஸ் நிக்லாஸ், சுங்க வீதி, திருகோணமலை (திருகோணமலை விடுதியின் உரிமையாளர்)**

**10. தேவநாயகம் சங்கர் (தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெருகல் மாவட்ட அவைத் துணைத் தலைவர்)**

**16. தேவநாயகம் சங்கர் (TNA வெருகள் பிதேச சபை அங்கத்தவர்)**

**17.மஹிந்தராசா நவமேனன், லிங்கநகர், திருகோணமலை (ஜனநாயகப் போராளிகள் கட்சி) 18.மற்றவை**

மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 103 இன் விதிகளின்படி, மேற்கண்ட நடவடிக்கைகளில் பங்கேற்கும் அனைத்து நபர்களின் விஷயத்திலும் பொதுவாக இந்த உத்தரவை வெளியிடுகிறேன். மேலும் இந்த உத்தரவு இன்று முதல் 14 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றும் உத்தரவிடுகிறேன்.

**நீதிவான் மூதூர்**

## விடுதலைப் புலி ... தொடர்ச்சி ...

புலிகள் இடையிலான வித்தியாசத்தை நாம் உணர முடிகிறது. புலிகள் முழுப்பலத்துடன் இருந்த போது கூட, அப்பாவிச் சிங்கள மக்களை தாக்கியதாகவோ, அவர்களைச் சிறைப்படுத்தியதாகவோ, அவர்களைத் துன்புறுத்தியதாகவோ, சிங்கள மக்கள் வசிக்கும் பகுதியை ஏவுகணைகளால் தாக்கியதாகவோ, துரும்பளவு கூட தகவலில்லை. விடுதலைப் புலிகளைத் தாக்குகிறோம் என்கிற பெயரில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்த சிங்கள இராணுவத்துக்கு நேர்மறையானதாக இருந்தது புலிகளின் பாய்ச்சல். அவர்கள் சிங்கள இராணுவத்தை மட்டுமே குறிவைத்தனர். சிங்கள இராணுவ முகாம்களை மட்டுமே தாக்கினர். சிங்கள இராணுவ வாகனங்களை மட்டுமே தகர்த்தனர். சிங்கள கடற்படைக் கப்பல்களை மட்டுமே நிர்மூலமாக்கினர். தங்கள் தாய் மண்ணை மீட்பதற்காக, அடுத்தவர் மண்ணில் அப்பாவிகள் மீது அவர்கள் அத்துமீறவில்லை. அதனால் தான், 'மாவீரர்' என்ற வார்த்தை அவர்களுக்கு மட்டுமே உரித்தாகிறது. வீரத்துக்கும் மாவீரத்துக்கும் இருக்கிற அடிப்படை வித்தியாசத்தை அறிந்து கொள்வோரால் தான் இதனை உணர முடியும். இஸ்ரேல் பகுதிக்குள் நுழைந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்து, அவர்களைப் பிணைக்கைதிகளாக வைத்திருப்பதற்கு ஹமாஸ் தரப்பில் அவர்களது பார்வையில் நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும். ஆனால் பேராண்மையுடன் போரிட்ட விடுதலைப் புலிகள் என்கிற அமைப்பின் மாவீரத்துக்கு நிகரானதாக இத்தகைய நடவடிக்கைகளைக் கருத முடியாது.

விடுதலைப் புலிகளின் தாயகக் கனவுக்கும் ஹமாசின் தாய் மண்மீட்புக் கனவுக்கும் அடிப்படையில் சில ஒற்றுமைகள் இருக்கலாம். ஆனால், நடவடிக்கைகள் முற்றிலும் வேறுபட்டவை. 'இலக்கு தான் முக்கியம், பாதை முக்கியமல்ல' என்று உரக்கப் பேசியது கீதை. அந்த நேர்மையற்ற அறிவுரையை நிராகரித்து விட்டு, ' இலக்கும் முக்கியம், அதற்கான நேர்மையான பாதையும் முக்கியம்' என்று நெஞ்சு நிமிர்த்தி நின்று, நஞ்சு அருந்தி உயிர் நீக்கவும் தயங்காத பேராண்மையால், எம் இனத்தை தலை நிமிரச் செய்த புலிகளையன்றி வேறெவரை மாவீரராக நாம் போற்ற முடியும்?

• • •

## தற்போதைய ... தொடர்ச்சி ...

தேவையான கணிசமான அளவு உணவு, நீர், மருந்துப்பொருட்கள், எரிபொருட்கள் போன்றவை அவர்களைச் சென்றடைவதற்குத் தேவையான அனுமதியை வழங்க அமெரிக்கா மேலும் இஸ்ரேல் மேலும் மிக அதிகமான அழுத்தத்தை ஹமாஸ் அமைப்பு பிரயோகித்திருக்கிறது என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்துகின்றோம். அதே நேரம் ஹமாஸ் இங்கே ஒரு பயங்கரவாத அமைப்பாக பச்சைகுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரேலோ உலகிலேயே மிகவும் அறநெறிக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கின்ற இராணுவ வீரர்களைக் கொண்ட நாடாகவும் தேசங்களுக்கு வழிகாட்டும் சுடராகவும் போற்றிப் புகழப்பட, அமெரிக்காவோ உலகம் முழுவதும் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் மிகப்பெரிய சனநாயக நாடு என்ற மதிப்பைப் பெற்றிருக்கிறது.

அடுத்து, உண்மையில் என்ன நடக்கும் என்பதை ஊகிப்பது மிகவும் கடினமாகவே இருக்கிறது. இதுவரை வெளிவந்த அறிக்கைகளைப் பார்க்கும் போது, இஸ்ரேல் குடிமக்களும் இரட்டைக் குடியுரிமைகளைக் கொண்ட கைதிகளும் தான் முதலில் விடுவிக்கப்படவிருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. இஸ்ரேல் தலைமை இந்தக் கசப்பான உண்மையை ஜீரணிப்பதற்கும், 'வெளிநாட்டுக் குடிமக்களே முதலில் விடுவிக்கப்படலாம்' என்ற இஸ்ரேல் மக்களின் சந்தேகத்திலிருந்து அவர்களை விடுவிக்கவுமே இவ்வாறான ஒரு அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது என்று ஊகிக்கலாம். இவ்வாறான ஒரு அணுகுமுறையை வற்புறுத்துவதன் மூலம், வெளிநாட்டுப் பிரசைகளை விடுவிக்கும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்பதை உறுதிப்படுத்தி, போர்நிறுத்தமும் நீடிக்கப்படும் என்ற உத்தரவாதத்தையும் கொடுப்பதற்காகவே என்று நம்பப்படுகிறது.

இது இப்படியிருக்க, காலப்போக்கில் நிரந்தரமாக மாறக்கூடிய தன்மையைக் கொண்ட தற்காலிகமான போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் தலைமைத்துவம் உடன்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தப் போரைத் தொடருவது என்பது இஸ்ரேலிய பிரதம மந்திரியின் தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான நிலைப்பாடும் ஆகும். இஸ்ரேலிய பாதுகாப்புக் கட்டமைப்பும் ஒக்ரோபர் 7ம் நாள் தந்த கறையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளவே விரும்புகின்றது. இஸ்ரேலை ஆட்சிசெய்யும் கூட்டணியிலுள்ள ஏனைய உறுப்பினர்களோ போரை நிறுத்தாமல் அதனை மேலும் நீடித்து இன்னும் மோசமான அழிவை ஏற்படுத்துதையே விரும்புகின்றனர்.

காஸாப் பிரதேசம் ஏற்கனவே கணிசமான அளவு அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்ற போதிலும், ஹமாஸ் அமைப்பினர் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படாமலே தான் இருக்கின்றனர். ஹமாஸ் போராளிகளின் தலைவர்களைவிட அதிகமான ஐக்கிய நாடுகளின் பணியாளர்களே இஸ்ரேலினால் இதுவரை மிக அதிகமாகக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

தாம் போரில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இஸ்ரேலுக்கு இருக்குமானால், அமெரிக்காவின் கொள்கைகளை அது தொடர்ந்து மீறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அப்படிப் பார்க்கும் போது, போர்நிறுத்தம் தொடராமல் இருக்கக்கூடிய செயற்பாடுகளை அது முன்னெடுக்கலாம். அத்துடன் தூரத்தில் இஸ்ரேல்-லெபனான் எல்லையில் மோதல்கள் படிப்படியாக வலுத்து வருகின்றன.

ஆகவே போர் தொடர்ந்து நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதே நேரம் பொதுமக்கள் பிரயோகிக்கும் அழுத்தத்தின் காரணமாகவும், ஒருவரை ஒருவர் வெறுக்கின்ற, அதே நேரம் ஒருவர் ஒருவரில் நம்பிக்கை வைக்க முடியாமல் இருக்கின்ற இஸ்ரேல் தலைவர்கள் இடையே காணப்படும் முரண்பாடுகளின் காரணமாகவும், இஸ்ரேல் அரசு கவிழக்கூடிய சாத்தியக்கூறும் தற்போது இருக்கின்றது.

அமெரிக்க தலைமைத்துவமும் தற்போது கேள்விக்குறியாகவே இருக்கிறது. மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் உலகின் ஏனைய பாகங்களிலும் இந்த நெருக்கடி ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் தொடர்பாக இன்னும் குறிப்பாக, ஒரு பிரதேச ரீதியான போராக இது மாறக்கூடிய சூழ்நிலை பற்றி எந்தவிதத்திலும் கவலைப்படுபவராக அதிபர் ஜோ பைடனைப் பார்க்க முடியவில்லை. இராஜீக செயலர் அன்ரனி பிளிங்கனுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. சமகாலத்தில் சிஐஏ (CIA) யின் இயக்குநரான வில்லியம் பேண்ஸ் மற்றும் பாதுகாப்புச் செயலரான ஒஸ்ரின் லொயிட் ஆகியோர் போகும் வகைதெரியாது நிற்கின்றனர். இவர்களில் யாரது கை ஓங்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இதில் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறமுடியும். அதாவது, அடுத்து என்ன நடக்கும் என்பது தொடர்பாக வோஷிங்டனின் சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்தோர் முன்வைக்கின்ற சாத்தியக் கூறுகளை நாம் இலகுவாகப் புறந்தள்ளிவிடலாம். காரணம், ஹமாஸ் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்பதையே அங்குள்ள அனைவரும் ஆசிக்கின்றனர். ஹமாஸ் அமைப்புடன் பேச்சுவார்தை மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்க்க அங்கு யாருமே தயாராக இல்லை என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

**நன்றி: அல்ஜஸீரா**

## ஓரங்கட்டப்ப... தொடர்ச்சி ...

இக்கிராமத்தில் அடிப்படைவசதிகள் மிக்க குறைவான நிலையில் அப்பகுதி மக்கள் தமது வளங்கள் வாய்ப்புக்களினையும் அணுகும் வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவும் பிரதான சமூகத்தின் இடைத்தொடர்பு மிகக் குறைவான நிலையில் இப்பகுதி மக்களின் நிலைத்திருப்பு குறித்த சவால்களுக்கு உட்பட்ட சமூகத்தை உருவாக்கி வருகின்றது.

பழங்குடிகள் என்ற குடியியல் ரீதியில் தங்களை இந்த நாட்டின் பிரஜையாக அடையாளப் படுத்திக்கொள்ள பொருத்தமான சட்ட ஆவணங்களைக் கொண்டிராத நிலையில் அரசினால் பொது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் மற்றும் அவர்களின் தேவைகளை அணுகும் வாய்ப்புக்களினைப் பெறாத நிலையில் தமது எதிர்கால சமூகத்தின் நிலைத்திருப்பினையும் கேள்விக் குறிக்குள்ளாக்கும் நிலை அதிகரித்துள்ளது.

பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பின்மை, கல்வி, மந்த போசாக்கு, பால்நிலை சார்ந்த ஒழுங்கற்ற சுகாதாரக்கட்டமைப்பு போன்றன அதிகரித்துள்ள நிலையில் இத்தகைய கிராமத்தின் பிரதான சமூகத்தினருடனான தொடர்பினையும், சேவை வழங்குனர்கள் அணுகும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்நிகழ்வானது ஒழுங்குபடுத்தப்பட்டது.

## மட்டக்களப்பை ... தொடர்ச்சி ...

பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளை விற்று வருகின்றார்கள்.

1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடவான பகுதியில் கால்நடை வளர்ப்புக்காக 1500 ஏக்கர் மேய்ச்சல் தரை நிலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பகுதியில் 60 பேருக்கான உறுதிக்காணி 120 ஏக்கரும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவையும் தற்போது வனஜீவி மற்றும் வனவள பாதுகாப்புத் திணைக்களங்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவ்வாறான நிலை தொடருமானால் தாமும் கால்நடை வளர்ப்பை கைவிடவுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

## தமிழர் தாயக ... தொடர்ச்சி ...

செலுத்தினர்.

கோப்பாய் துயிலும் இல்லத்திற்கு முன்பாக மாவீரர் நினைவேந்தல் வணக்க நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வணக்கநிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அதேபோல வன்னி, கிளிநொச்சி, மன்னார் போன்ற வட மாகாணத்தில் உள்ள பிரதேசங்களிலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள தாண்டியடி பிரதேசங்களிலும் மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

பல இடங்களில் மக்களும், அரசியல் பிரதிநிதிகளும், அரசியல் கட்சி உறுப்பினர்களும், பொது அமைப்புக்களும் மாவீரர் துயிலும் இல்லங்களை துப்பரவு செய்து நினைவேந்தலுக்கான ஏற்பாடுகாளை செய்து வருவதை காணக் கூடியதாக உள்ளது.

மாவீர்களை நினைவு கூர்வதென்பது வெறும் ஒரு சடங்கு அல்ல. மாவீரர்களை நினைவு கூர்வதின் பெறுமதி என்பது வரலாற்றில் வைத்து அதைப் புரிந்து கொள்ளல் என்பதே அதன் உண்மையான உள்ளடக்கம் ஆகும்.

அது தலைமுறை கடந்து இலக்கை அடையும்வரை போராடுதல் என்பதனை ஒன்றிணைக்கும் ஒரு தொடர் இயக்கமாகும். எனவே, இந்த வருட மாவீரர் நாளையும் அதற்கேயுரிய அரசியல் உள்ளடக்கங்களுடன், எழுச்சியுடன், உணர்வு பூர்வமாக நினைவு கூர்வோம்.

## இஸ்ரேல் நட ... தொடர்ச்சி ...

எனப்படும் படை நடவடிக்கையை தொடர்ந்து 350,000 இஸ்ரேல் மக்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும் ஒரு மில்லியன் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இஸ்ரேலுக்கு ஆதரவான நிறுவனங்களின் பங்குகளும் வீழ்ச்சியை கண்டுள்ளன. அதில் பெப்சி, மக்டொனால்ட், ஸ்ரார்பக் என்பனவும் அடங்கியுள்ளன. தினமும் 250 மில்லியன் டொலர்கள் போருக்கு செலவாகின்றது. அதாவது 1 பில்லியன் செகேல். காமாஸின் ஏவுகணை ஒன்றை தடுத்து வீழ்த்துவதற்கு 20,000 டொலர்கள் தொடக்கம் 100,000 டொலர்கள் செலவாகின்றது. ஆயுதங்களுக்கு செலவிட்ட தொகை 18 பில்லியன் டொலர்கள் இது இஸ்ரேலின் மொத்த உற்பத்தியில் 3.5 விகிதம்.

மேலும் 50,000 வெளிநாட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இஸ்ரேலுக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 73 விகிதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. அடுத்த 6 மாதங்கள் போர் நீடித்தால் சுற்றுலாப்பயணத்துறை முற்றாக முடங்கிபோகும் நிலை ஏற்படலாம். இஸ்ரேலின் மிக முக்கிய ரமார் எரிவாயு உற்பத்தி நிலையம் உற்பத்தியை நிறுத்தியுள்ளது. பல முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## முல்லைத்தீவைச் ... தொடர்ச்சி ...

சாதனையை பெற்று ஈழத்தமிழ் மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தன்னுடன் போட்டியில் பங்குபற்றியவர்களுடன், கால்களில் பாதணிகள் இன்றி அவர் போட்டியிட்டு வெற்றிபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவில் பிறந்து வளர்ந்த அவர் இலங்கை அரசின் தமிழின அழிப்புப் போரில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுக்கு ... தொடர்ச்சி ...

இடம்பெற்ற தாக்குதலை தொடர்ந்து பெருமளவான பணியாளர்கள் இஸ்ரேலை விட்டு வெளியேறியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது.

## நாங்கள் ஒன்று ... தொடர்ச்சி ...

ஆதன் ஒரு கட்டமாகவே மட்டக்களப்பில் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட பிரதான தீபம் ஏற்றும் நினைவுக்கல் உடைக்கப்பட்டதுடன் சந்திவெளியில் மாவீரர்கள் கௌரவிப்பு நிகழ்வும் பொலிஸாரினால் தடுக்கப்பட்டுள்ளது.அத்துடன் தரவையிலும் வாகரை கண்டலடியிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடாத்துவதை தடுப்பதற்கான முன்னெடுப்புகளை புலனாய்வுப்பிரிவும் காவல்துறையும் முன்னெடுத்துள்ளது.

கிழக்கினைப்பொறுத்த வரையில் திருகோணமலையில் ஆழங்குளம் துயிலுமில் லம், தியாகவனம் துயிலுமில்லம், பெரியகுளம் துயிலுமில்லம், உப்பாறு துயிலுமில்லம் ஆகியனவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை கண்டலடி துயிலும் இல்லம்,தரவை துயிலும் இல்லம்,தாண்டியடி துயிலும் இல்லம், மாவடி முன்மாரி துயிலும் இல்லமும் அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லமும் காணப்படுகின்றது.இந்த துயிலும் இல்லங்களில் சுமார் எட்டாயிரம் மாவீரர்கள் விதைக்கப்பட்டுள்ளனர்.இந்த எட்டாயிரம் மாவீரர்களும் ஒரே கனவுடனேயே வீரச்சாவை தழுவிக்கொண்டவர்களாகவுள்ளனர்.

அவர்களின் கனவுகளை நாங்கள் ஒன்றுபட்டு நிற்பதன் மூலம் மட்டுமே அடைந்துகொள்ளமுடியும்.இந்த ஒற்றுமையென்பது புலம்பெயர் தேசத்திலும் கிழக்கிலும் ஏற்படும்போதே அவர்களின் அந்த கனவு நிறைவேறும் நிலைமையேற்படும்.

இன்று கிழக்கில் மாவீரர்கள் நினைவேந்தல் நிகழ்வுகள் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதும் இங்கு ஏற்பட்டுள்ள ஒற்றுமையீனங்கள் நாளை மாவீரர் தினங்கள் தொடர்பில் எதிர்கால சந்ததிக்கு பிழையான எண்ணக்கருக்களை வழங்கிவிடக்கூடாது என்பதில் அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் எமது மண்ணுக்காக உயிர்நீர்த்தவர்களின் எண்ணம் நிறைவேறுவதற்கான களம் அமைக்கப்படும்.

## அமெரிக்க சிறப்பு ... தொடர்ச்சி ...

படையினர் சோமாலியா கடல் கொள்கையர்களை போல் அல்ல. அவர்கள் மிக நவீன ஆயுதங்களுடன் கூடிய முப்படைகளையும் கொண்டவர்கள். கலக்சி லீடர் என்ற கப்பலையும் உலங்குவானூர்தியில் வந்துதான் கைப்பற்றியிருந்தனர். பல ஆயிரம் மைல்கள் கடந்து சென்று தாக்கும் குரூஸ் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்களை கொண்டுள்ளனர்.

செங்கடலின் வாயிலில் ஏமன் கப்பல் போக்குவரத்தை முடக்குமாக இருந்தால் அது இஸ்ரேலுக்கு மத்தியதரைக்கடல் ஊடான மிகவும் செலவு மிக்க சுற்றுப்பாதை வாழியாக செல்லவேண்டிய நிலையை ஏற்படுத்தும். தென்னாபிரிக்காவில் அதற்கு மீண்டும் எரிபொருள் நிரப்பவேண்டிய நிலையும் ஏற்படும். அது தென்னாபிரிக்காவில் தான் சாத்தியம். ஆனால் தற்போது தென்னாபிரிக்கா பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக நிற்கின்றது. இது நிலைமையை மேலும் மோசமாக்கும். உலகின் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான கடல் வர்த்தகம் கடும் பாதிப்புக்களை சந்திக்கலாம்.



இஸ்ரேலின் கொடியை தாங்கிச் செல்லும் கப்பல்கள், இஸ்ரேலிய நிறுவனங்களுக்கு சொந்தமான கப்பல்கள் மற்றும் இஸ்ரேல் நிறுவனங்களால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கப்பல்கள் செங்கடலினால் செல்ல அனுமதிக்கப்படாது எனவும், அதில் பணியாற்றும் வெளிநாட்டவர்கள் அவதானமாக இருக்குமாறும், அதில் பணியாற்றுவதை வெளிநாட்டவர்களும், வெளிநாட்டு நிறுவனங்களும், நாடுகளும் தவிர்க்க வேண்டும் எனவும் ஏமன் படைத்துறை பேச்சாளர் தெரிவித்துள்ள கருத்து கேந்திர மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது.

இதனிடையே, அமெரிக்காவின் *USS Bataan (LHD-5)* என்ற ஈரூடக தாக்குதல் கப்பல் *(amphibious assault ship)* செங்கடலில் உள்ள சவுதி அரேபியாவின் ஜெட்டா துறைமுகத்திற்கு வந்துள்ளது. அது தற்போது நிலைகொண்டுள்ள இடம் மிகவும் முக்கியமானது. அதாவது ஏமனின் துறைமுகத்தில் தரையிறங்கி ஒரு தாக்குதலை மேற்கொள்ளும் வகையில் அதற்கு அண்மையான பகுதி.

அமெரிக்க கப்பலில் சிறப்பு கடற்படையான Marines படையினரே நிலை கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கப்படைகள் ஏமனில் தரையிறங்குமாக இருந்தால் அது ஒரு பிராந்திய போராக மாற்றம் பெறும் சாத்தியங்களே அதிகம் உள்ளது.

அதிக அழிவுகளை தரும் பிராந்திய போரா இல்லை காசா மீதான தாக்குதலை நிறுத்தி அமைதிவழிக்கு செல்வதா என்பது தான் தற்போது முன்னுள்ள தெரிவுகள். அரபு நாடுகளை ஒருங்கிணைத்து பாலஸ்தீனத்திற்கான தீர்வு தொடர்பில் சீனா மேற்கொண்டுவரும் பேச்சுகள் சில சமயம் அமெரிக்காவுக்கு உதவலாம்.

• • •

## இந்தியா ஊடாக... தொடர்ச்சி ...

முன்னேறியுள்ளது.

இந்தியாவில் சீனாவுக்கு அடுத்ததாக மிகப்பெரும் எண்ணை சுத்திகரிப்பு ஆலைகள் உள்ளன. அது ரஸ்யாவில் இருந்தே 40 விகிதமான எண்ணைகளை கொள்வனவு செய்கின்றது. உக்ரைன் போரை தொடர்ந்து மேற்குலகம் விதித்த தடைகளை தனக்கு சாதகமாக பயன்படுத்திவரும் இந்தியா ரஸ்யாவின் எண்ணைகளை தனது நிறுவனங்களின் ஊடாக விற்பனை செய்து வருகின்றது.

## மாவீரர் நினைவு ... தொடர்ச்சி ...

வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின்படி விடுமையும் இறைமையும் கொண்ட தமிழீழக் குமுகியக் குடியரசு*(FREE AND SOVEREIGN REPUBLIC OF SOCIALIST TAMIL EELAM)* அமைக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நம் மாவீரர்கள் மக்கள் தமக்களித்த கட்டளையாகவே கொண்டார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. உலகில் பல விடுதலை இயக்கங்கள் மதவெறிச் சார்பின் பக்கம் இழுக்கப்படுவதற்கு மாறான உலகிய *(SECULAR)* நிலைப்பாட்டில் நம் மாவீரர்கள் ஊன்றி நின்றார்கள்.

உறுதியான போராட்டங்களுக்கு மாற்றாக உருப்படாத 13ஆம் திருத்தம் போன்ற உலுத்துப் போன சமரசத் திட்டங்களை அரசியல் மேசையில் உருட்டும் இந்திய-சிங்களச் சூதாட்டங்கள் குறித்து நாம் எச்சரிக்கையோடு இருப்பதையே மாவீரர்களின் பெயரால் வலியுறுத்த வேண்டியுள்ளது.

இருதுருவ உலகம் ஒருதுருவ உலகமாகி, பலதுருவ உலகமாகி வருவதாக பன்னாட்டு அரசறிவியல் வல்லுநர்கள் கூறி வருகின்றனர். ஆளும் அரசுகளை மட்டுமே இவர்கள் கணக்கில் கொண்டுள்ளார்கள். உண்மையில் போராடும் தேசங்களே இறுதிநோக்கில் வரலாற்றுச் சக்கரங்களை உருட்டிச் செல்கின்றன. அரசுகளற்ற தேசங்கள் என்ற அணிவரிசையில் தமிழீழமும் புகழார்ந்த இடம்பெற மாவீரர்களின் வீரமும் ஈகமும் வழிசெய்தன என்பதை நெஞ்சில் நிறுத்தி அவர்களை வணங்குவோம்!

## கைதிகள் பரிமாற் ... தொடர்ச்சி ...

உள்ள பெண்கள் மற்றும் 18 வயதிற்கு குறைவானவர்கள் உட்பட 50 கைதிகளை விடுவிப்பதுடன், இஸ்ரேல் தன்னிடம் உள்ள 150 பாலஸ்தீனியர்களை விடுவிப்பது என்ற உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், 4 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தத்தை மேற் கொண்டு உதவிப் பொருட்கள் காசா பகுதியை சென்றடைவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவது எனவும் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்- ஹமாஸ் அரசுகளுக்கு இடையிலான இந்த உடன்பாட்டை அமெரிக்கா, சீனா, ரஸ்யா, ஐக்கியநாடுகள் சபை உட்பட பல நாடுகள் வரவேற்றுள்ளன. மேலும் அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி பிளிங்டனும் அடுத்த வாரம் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## களங்கமற்ற ... தொடர்ச்சி ...

கொடுக்கப்பட வேண்டியவை. சிந்தனைகள் பரந்து விரிந்து உலகை ஆராய்ந்து, நுணுக்கமான நுண்ணறிவுடன் பயணிக்கவேண்டிய நாம், துளி பெறுமதி இல்லா விடயங்களுக்காகத் தம்முள் முட்டிமோதிப் பகை வளர்த்து ஒற்றுமை குறைந்து உருக்குலைந்து போதல் எந்த வகையில் நியாயம்??? தன்னினத்தைப் பழிப்பதும், குற்றஞ் சொல்வதும் இவ்வெழுத்தின் நோக்கம் அல்ல. உயிர் கொடுத்தவர் கனவை நினைவாக்க, உண்மை உணர்ந்து நமக்குள் கட்டாயம் தெளிவடைய ஒவ்வொரு தமிழனும் செய்ய வேண்டிய "சுய மதிப்பீடு இது. சீரமைக்கப்பட்ட வாய்க்கால் வழிநீர் போல தெளிவடைந்த இனத்தின் சிந்தனைகள் தான் அடுத்த சந்ததியிடம் காத்திரமாய்ப் போய்ச் சேரும்.

ஒவ்வொரு மாவீரனின் கனவும், "விட்டுச் செல்லும் தன் பொறுப்பை மற்றத் தமிழன் சுமப்பான்" என்பதுவே . அவன் சுமந்த ஆயுதம் என்பது வெறும் சன்னம் துப்பும் துவக்குகள் மட்டுமல்ல. எண்ணம் முழுவதும் சுமந்த உன்னதமான கொள்கைகள் அவை.

அவற்றைக் கையேந்தவும் சுமந்து பயணிக்கவும் தூய மனதுகளால் மட்டும் தான் முடியும். மாவீரச்செல்வங்களின் கல்லறை முன்நின்று நம் மனங்களைத் தூய்மைப்படுத்துவோம். தெளிவுற்றுத் திரும்புவோம். என்னால் முடிந்ததனைத்தும் தன்னலமின்றி என் இனத்துக்குச் செய்வேன் என்று திடசங்கற்பம் கொள்வோம். களங்கமற்ற மனதுகளால் கல்லறைகளில் சபதம் செய்வோம்.ஓ மாவீரனே உன் ஆவி கொண்ட தாகமதை, உன் கொள்கை வழி நின்று,உறுதியான என் செயல்கள் கொண்டு தீர்ப்பேன் உறுதி.

## தங்கள் ஆசைக ... தொடர்ச்சி ...

எதிர்பார்ப்பதும் மடைமைத்தனம் தான்.

ஆனாலும் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு குழு அமைக்கப்பட்டு மாவீரர் குடும்பங்களின் நலனை மேம்படுத்தும் தொடர் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இக்குழுவில் அரசியல் வாதிகள் எவரையும் எந்தக் காரணம் கொண்டும் உள்வாங்கக்கூடாது. அப்போதுதான் அந்தக் குழுவால் தமது பணியை திட்டமிட்டவாறு திறம்படச் செயற்படுத்த முடியும். வேறு யாருமே மாவீரர்கள் தொடர்பான எந்த வேலைத் திட்டத்தினையும் செய்வதற்கு இடங்கொடாத வகையில் அந்த ஊரகக் குழுக்கள் செயற்பட வேண்டும்.

இதுவே தற்காலத்தின் தேவையும் மாவீரர்களுக்கு தமிழ்மக்கள் செய்யும் கைமாறும் ஆகும்.

மாவீரர்களுக் ... தொடர்ச்சி ...

என வள்ளுவரால் விடுக்கப்படுகிறது.

எனவே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்னும் ஈழத்தமிழர்களின் மண் மீட்புக்கான ஆயுதப் போராட்டம் என்பது அவர்களின் தமிழ்ப்பண்பாட்டின் அடிப்படையில் தங்கள்மேல் சிறிலங்கா தொடுத்த “மக்கள் மேலான போரில்” தங்களுடைய உயிரையும் உடலையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாப்பதற்கான தேசிய விடுதலைப் போராட்ட ஆயுத எதிர்ப்பும் பாதுகாப்புமே ஒழிய அது பிரிவினைப் போரோ அல்லது பயங்கரவாதச் செயற்பாடோ அல்லது வேறு எந்த இனத்திற்கோ நாட்டுக்கோ எதிரான போரோ அல்ல. ஆனால் சிறிலங்காவும் அதன் ஆதரவு வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள் எனவும் பிறருடைய உயிரைக் காக்கத் தம் உயிரையே அர்ப்பணித்த கரும்புலி மறவர்களை தற்கொலைப்படையினர் எனவும் இழிவுசெய்து வருகின்றனர். சிறிலங்கா



முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் 176000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்த உலக வரலாற்றின் பின்னரும் கடந்த 14 ஆண்டுகளாக இன்று வரை உலகின் பல நாடுகளிலும் அமெரிக்க இந்திய இணைப்புக் கட்டாயத்தின் மூலம் இனஅழிப்பு செய்து அதுவும் சிறுவர்கள் பெண்கள் முதியவர் வலுவிழந்தவர்கள் என்று ஈழத்தமிழ் குடிமக்கள் அனைவரையும் தேசியத் தலைவரின் அன்பு மகன் பாலச்சந்திரனை பாலன் என்று கூட பாராது மிருகத்தனமான முறையில் இனப்படுகொலை செய்தமையும் ஈழத்தமிழினப் பெண்களை கூட்டாகவும் தனியாகவும் வன்முறைப்புணர்ச்சிகளுக்கு உள்ளாக்கி இனப்படுகொலை செய்து அவர்களின் நிர்வாண உடலங்களையும் காட்சிப் பொருளாக்கி மனித நாகரிகத்தையே அழித்த பின்னரும் இன்றும் அனைத்துலகச் சட்டங்கள் வழி அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்குள் இந்த இனஅழிப்பாளர்கள் செல்லாது பலவழிகளில் பாதுகாத்துக் கொண்டு அவர்களுக்கான பொருளாதாரச்சிக்கலிலும் தாங்களே கைகொடுத்து அவர்களைப் பாதுகாத்து நிற்பதே இன்றைய சமகால அரசியல் வரலாறாக உள்ளது. இந்த நிலைமைகளை மாற்றாது வெறுமனே மாவீரர்நாட்களை பெருமை பேசு விழாக்களாக ஈழத்தமிழர்களும் 14 ஆண்டுகளாகக் கொண்டாடி வருவதும் வேதனையான ஈழத்தமிழர் வரலாறாக உள்ளது.

உண்மையில் இறைமையின் அடிப்படையில் அவர்கள் தங்களின் பிர்க்கப்பட முடியாத தன்னாட்சி உரிமையின் வழி தங்களுடைய அரசியல் எதிர்காலத்தைத் தங்களின் சொந்த மண்ணாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொடர்ந்து வரும் இலங்கைத் தீவில் தங்களுடைய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீளவும் அடை முயற்சிப்பது எந்த வகையில் தவறாக உள்ளது. ஒருசிறிய எண்ணிக்கையான விடுதலைப்போராளிகளின் மேல் பாரிய பெரும் படையெடுப்பு நடத்தப்படுகையில் அதனைத் தடுத்த நிறுத்த மேற்கொள்ளப்பட்ட யுத்த தந்திரோபயங்கள் அனைத்துலக முறைமைகளுக்கு எதிரானது என்றால் அதனைச் சுட்டிக்காட்டி நெறிப்படுத்தாமல் முழு ஈழத்தமிழர்களையும் தொடர்ந்தும் இன்று வரை சிறிலங்கா இனஅழிப்பு செய்ய அனைத்துலக வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் சிறிலங்காவுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு அளிப்பது உலக வரலாற்றில் இவர்களும் ஈழத்தமிழர் இனஅழிப்பின் குற்றவாளிகள் என்ற பதிவை இன்றில்லாவிட்டாலும் என்றோ ஏற்படுத்தவே செய்யும்.

1796 முதல் 1972 வரை ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமைக்குத் தங்களை மேலாளராகக் கொண்டு ஆட்சி செய்த பிரித்தானிய காலனித்துவம் தங்களை சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக்குள் இலங்கை அரசு என்ற புதிய ஆட்சி முறைமைக்குள் 04.02. 1948 இல் அடக்கியதால் உருவானதே சிங்கள பௌத்த பேரினவாதப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சி எனத் தெளிவாக நிறுவுகின்றனர். இந்தப் பாராளுமன்றக் கொடுங்கோன்மைக்கு எதிராக முதலில் அனைத்து சனநாயகவழிகளிலும் முயன்று தங்கள் அரசியல் உரிமைகளை பெற எடுத்த எல்லா செயற்பாடுகளையும் சிறிலங்கா அரசபயங்கரவாதத்தாலும் இனஅழிப்பு இனத் துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு என்பவற்றையே ஆட்சிக் கொள்கையாகவும் கோட்பாடாகவும் கொண்ட ஆட்சி முறையாலும் சிறிலங்கா தடுத்தது என்பதையும் ஈழத்தமிழர்கள் உலகுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

சோல்பரி அரசியல் அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கை அரசு அந்த அரசியலமைப்பின் 29(2) பிரிவால் இலங்கையில் சிறுபான்மை மதங்களுக்கும் இனங் களுக்கும் அளித்த பாதுகாப்பால் ஈழத்தமிழர்களின் இறைமையின் மீயுயர் ஆட்சியாளர்களாக 1972 வரை பிரித்தானிய மகாராணி அவர்களே விளங்கி வந்தார். இந்த அரசியலமைப்புப் பாதுகாப்பை வன்முறைப்படுத்தி 22.05. 1972 முதல் அரசற்ற தேச இனமாக ஈழத்தமிழர்களை சிறிலங்கா மாற்றி இனங்காணக்கூடிய அச்சத்தையே ஈழத்தமிழர்களுக்கான நாளாந்த வாழ்வாக தனது படைகள் மூலம் சிறிலங்கா கட்டமைத்த அனைத்துலகச் சட்டவிரோத செயலில் இருந்து விடுபட்டு வாழத் தங்களுக்கான தன்னாட்சிப் பிரகடனத்தை 1975இல் அக்காலத் தங்களின் அரசியல் தலைவர் சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தனக்கு காங்கேசன்துறை அடையாளக்குடியொப்பத்தில் கிடைத்த ஆணையின் அடிப்பயைடில் விடுத்து சிறிலங்காப் பாராளுமன்ற ஆட்சியை விட்டு சனநாயக முறைமையின் வழிவிலகினார்.

1977ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்னும் சுதந்திரத்திற்கான குடியொப்



பம் அளித்த தங்களின் தொன்மைத் தாயகத்தை மீள்விக்கும் மக்கள் ஆணையினை நடைமுறைப்படுத்த 1978 முதல் 2009 வரை தங்களுக்கான நடைமுறையரசை சீருடை அணிந்த முப்படைகளினது பாதுகாப்பில் தங்களுக்கான சட்டவாக்க சட்ட அமுலாக்க நிர்வாக ஆட்சிமுறைகளுடன் ஈழத்தமிழர்கள் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் தலைமையில் செயற்படுத்தினர். அதனை எதிர்த்த சிறிலங்காவின் படைகளுக்கு 1977 குடியொப்ப விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்த முறைமைக்கு ஏற்ப அவர்களுக்கு எதிராகப் போராடியவாறு தங்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் உலக ஏற்புடைமையை எதிர்பார்த்து நடைமுறையாட்சியை முன்னெடுத்து வந்தனர். இந்த 31 ஆண்டுகால உலக விடுதலைப் போராட்டங்களில் ஒன்றான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த தமிழீழத் தேச விடுதலைப் போராளிகளின் போற்றுதல் நாள் தான் மாவீரர் நாள். உண்மையில் இந்நாள் உலக மாவீரர்நானாகவும் உலகால் கொண்டாடப்பட வேண்டிய நாள். இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் 1989 முதல் ஈழத்தமிழர்களின் தேசிய நாளாகவும் மாவீர வணக்கப் பண்பாட்டுப் பெருவிழாவாகவும் தொடங்கப் பெற்ற கார்த்திகை 27 இன்றுவரை ஈழத்தமிழரின் தாயகத்திலும் உலகெங்கும் ஈழத்தமிழர்கள் அரசியல் புகலிடம் பெற்று அந்நாடுகளின் குடிகளாக வாழும் நகரங்களிலும் தமிழகத்திலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இது தமிழரின் பண்பாட்டு வரலாற்றின் நீட்சி என்பதை புதுவை இரத்தின துரை அவர்களின்

"தீயிடும் ஆரிய மரபழித்த
நடுகல் வழிபாடிது



தமிழரின் பழைய மரபு புதுப்பிக்கப்படுகிறது
ஈமத்தாழியும்
நடுகல்லும்
வெறியாட்டுமே நமக்கிருந்த வழிபாடு.
வெற்றி வீரர்கள் வீரத்தெய்வங்களாயினர்
இவர்கள் கற்பனையற்ற கடவுளர்
பகைவரும் திசை பார்த்து
எல்லைப் புறங்களில் இவர்களுக்கு
கோயிலிருந்தது
சாவடைந்த பின்பும்
இவர்களுக்கோர் சக்தியிருந்தது
வீரமாதேவியின் விழிகள் திறந்தேயிருந்தன
இன்றும் நிலத்தில் விதைக்கின்றோம்
எங்கள் நிர்மல ரூபங்களை
இது விடுதலைக்கான விதைப்பு
கட்டறுப்புக்கான விலை கொடுப்பு.
உழவும் விதைப்பும்
நாளை நமக்கெனவரும் அறுவடைக்கானது
நம்பிக்கையின் ஒளித்திசையில் பயணம்."

என்னும் கவிதாவரிகளால் உலகிற்கு மாவீரர் நாள் பண்பாட்டு நாள் என்பதையும் மாவீரவழிபாடு தமிழரின் நம்பிக்கை மதச் சுதந்திரங்களின் அடிப்படையில் அவர்களுடைய அடிப்படை மனித உரிமை என்பதையும் தெட்டத் தெளிவாக்குகின்றார்.

எனவே இன்று சிறிலங்கா மாவீரர் நாளை கொண்டாடுவதைத் தடுக்க எடுக்கும் முயற்சிகள் அத்தனையும் சிறிலங்காவுக்கு ஈழத்தமிழர்களைத் தனது குடிகளாக ஆளும் எண்ணமோ நோக்கோ இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

இந்த உண்மையை உலகுக்குத் தெளிவுபடுத்தி ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் மீளவும் தங்களுக்கான இறைமையின் அடிப்படையிலும் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் பின்னணியிலும் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தை அமைத்திட அவர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் உதவ உழைப்பதே மாவீரர்களுக்கான உண்மையான வீரவணக்கமாக அமையும்.

• • •